REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER. T'Phone: 805

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

தாபகர்: நா. பொன்னையா

மலர் 22 | சுன்னாகம், கர மாசி கஉ 24-2-52 ஞாயிறு (காந்தி ஆண்டு 83) | இதழ் 32

சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார்வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்



திறமான கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள், மேசை, 'பொக்கெற்' கடிகாரங்கள் விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

★ குண்டுமணிக்குள்ளே கோட்டை கொத்தளங்களை அமைப்பதுபோலக் கொழும்புத் திட்டப் பொருட்காட்சி எத்தனையோவகை அழகுகளுடன் பொலிந்து விளங்குகின்றது.

# கலைவளம்பொழியுங்கவினுறுகாட்சி

## கொழும்புத் திட்டத்தால் ஏற்பட்ட கூட்டுறவு



மகாராணி எலிசபெத் இலங்கைக்கு வர முடியாத காரணத்தாற் கொழும்புத் திட்டப் பொருட் காட்சியைத் திறந்து வைக்கும் பாக்கியத்தைப் பிரதம தேசாதிபதி சோல்பெரிப் பிரபு பெற்றுள்ளார்கள்.

**கொழும்புத்** திட்டப் பொருட்காட்சியைப் பார்ப்பவர்கள் அகில உலக அற்புதங்களையும் நொடிப் பொழுதிற் கண்டு இது பூலோகமோ அல்லது இந்திரலோகந்தானோ என்று சொல்லி ஆச்சரியத்தில் அமிழ்ந்துவார்களானால் அது அவர்களுடைய தவறல்ல. இக்காட்சியை ஒழுங்கு செய்தவர்களின் கலைத்திறனும் செயற் திறனுமே இதற்குக் காரணங்களாகும். குண்டுமணிக்குள்ளே கோட்டை கொத்தளங்களை அமைப்பதுபோலக் கொழும்புத் திட்டப் பொருட்காட்சி எத்தனையோவகை அழகுகளுடன்பொலிந்து விளங்குகின்றது.

அகில உலகத்தின் கவனத்தையுங் கவர்ந்துள்ள இலங்கையானது இந்தப் பொருட்காட்சி மூலம் கீர்த்தியின் உச்சத்தை எட்டிப்பிடித்து விட்டது. மாபெரும் இக்காட்சியைச் சிறப்புற அமைப்பதற்காக நூற்றுக்கணக்கான தொழிலாளர்களும் மேற்பார்வையாளரும் இரவுபகலாக உழைத்தனர். இலட்சக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்தனர். இதன் பேறுகக் கொழும்பு மாநகரம் இன்று இந்திரலோகமாக விளங்குகின்றது.

### பெரிய வைபவம்

தென், தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இதைப்போன்ற ஒரு வைபவம் இதுவரை நடந்ததில்லை. அகில உலக மக்களின் கூட்டுறவுடன் பரிணமித்திருக்கும் இத்திட்டத்திற் சாம்ராச்சியநாடுகளும் பிறநாடுகளும் மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றுகின்றன. கொழும்புத் திட்டம் யாதென்பதை மக்களுக்கு விளக்கி வைப்பதற்காகவே இக் காட்சி பல்வேறு பகுதிகளாக வகுக்கப்பட்டிருக்கின்றது.

சாம்ராச்சிய நாடுகளின் மகாநாடு 1950-ம் ஆண்டிற் கொழும்பில் நடைபெற்றது. அம்மகாநாட்டிற்றுன் தென், தென்கிழக்கு ஆசியநாடுகளின் பொருளாதார சுபிட்சத்தை அடிப்படையாகக் கொண்ட கொழும்புத் திட்டம் கருக்கொண்டது. இன்று இத்திட்டத்தின் நோக்கங்களுக்கேற்ப இலங்கை உட்பட வேறும் பல நாடுகள் பொருளாதாரத் துறைகள் சீர்பெறுவதற்கான முயற்சிகளாற் பயனடைந்து வருகின்றன.

### ஆசிய நாடுகள்

இக்காட்சியிற் பதினுறு வெளிநாடுகள் பங்குபற்றியுள்ளன. இந் நாடுகளுக்குரிய நிலையங்களில் எல்லாம் அந் நாடுகளின் பொருள்வளம், கலைவளம் என்பவை யாவும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் தேவைகள் யாவை என்பதை அறிந்துகொள்வதற்கும் இவை உதவி புரிகின்றன.

பிரிட்டனுக்குரிய நிலையத்திலேதான், தென்கிழக்கு நாடுகளின் இயற்கைச் செல்வங்களின் விபரங்கள் படங்கள் வாயிலாக நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. இந்நாடுகளின் முக்கிய தேவைகள், பெருகிவரும் சனத்தொகை, உணவுக் கஷ்டம், வறுமை, நோய் என்பன யாவும், புள்ளி விபரங்களுடன் தரப்பட்டிருக்கின்றன.

இவற்றையெல்லாம் தன்னகத்தே கொண்டு ஒவ்வொரு நாடும் தன் தன் பொருட்களையும் சித்திர வேலைப்பாடுகளையும் யந்திர சாதனங்களையும் காட்சிக்கு வைத்துள்ளது. பிரிட்டிஷ் நிலையத்தில் யந்திரக் கலைநுட்பங்களை எடுத்துக்காட்டும் யந்திர சாதனங்கள் குறிப்பிடத்தக்கன.

### தேசீய மண்டபம்

இலங்கைத் தேசிய மண்டபம் கலை அழகு ததும்பக் கவின்பெற அமைக்கப்பெற்றுள்ளது. கீழைத்தேசச் சிற்ப சித்திர வேலைப்பாடுகளுடன் விளங்கும் இம் மண்டபத்துக்கு மூன்று முற்றங்கள் உள. மண்டபத்தின் நடுவே முக்கிய விருந்தினரை வரவேற்று உபசரித்தற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இம் மணிமண்டபத்தின் முக்கிய பகுதியாக விளங்கும் கூடத்தில் விலை மதிக்கவொண்ணுத ஆபரணங்களும் இரத்தினக் கற்களும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் சிக்காரான இரும்புப் பெட்டிகளிற் பத்திரமாக வைக்கப்பெற்றுள்ளன.

இலங்கை அரசாங்கம் நாட்டின் செல்வ நிலையைச் செம்மையாக்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகச் சில புதிய திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது. பாரிய சில திட்டங்களின் விபரங்களைக் கூறும் காட்சிகள் கவர்ச்சிகரமான முறையில் அமைக்கப் பெற்

ஈழகேசரி விசேஷ நிருபர்

றுள்ளன. கல்லோயாத் திட்டத்தை விளக்கும் 'மாதிரி' உருவம் இவற்றுள் ஒன்றாகும். இத் திட்டம் சம்பந்தமான பழைய வேலைகளையும் புதிய வேலைகளையும் ஒரே சமயத்தில் விளக்குவதில் மின்சார ஒளியின் உதவி மிக நுட்பமாகப் பிரயோகப்படுத்தப்படுகின்றது.

இலங்கையின் பழைய சரித்திரத்தை உணர்த்தி வைக்கும் காட்சிப் பொருள்கள் உட்பட இந்நாட்டின் கலை, கைத்தொழில் சம்பந்தமான பொருள்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. சுருங்கக் கூறின் இலங்கையின் தேசிய மண்டபம் ஒரு கலைக் கோயிலாகவே காட்சியளிக்கின்றது.

### அரசாங்கப்பகுதிகள்

இலங்கை அரசாங்கத்தின் பல்வேறு பகுதிகளும் இப்பொருட்காட்சியில் ஈடுபட்டு உழைத்துள்ளன. கைப்பணி, கலை, கலாசாரம் ஆதியாம் துறைகளில் நாடு அடைந்துள்ள அபிவிருத்தியை எடுத்துக்காட்டும் காட்சிப் பகுதிகள் மிக ஆராய்வுடன் ஒழுங்கு செய்யப்பட்டு இருக்கின்றன. 1941-ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை கூட்டுறவு இயக்கம் அடைந்துள்ள வளர்ச்சியை விளக்கும் இலங்கையின் தேசப் படமொன்று வர்ணக்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

# உலகம் சுற்றும் தமிழ்ச் செல்வர்

## இலக்குமணச்செட்டியார் யாத்திரை அனுபவம்

யாழ்ப்பாணம், 22-2-52

**'தமிழ் வளர்க்கும் யாழ்ப்பாணத்தை** எப்படி மறக்க முடியும்' என்று சொல்லிப் பலாலி விமான நிலையத்திற் சந்தித்த அன்பர்களுடன் பேசி மகிழ்ந்த திரு. சோம. லெ. இலக்குமணன் செட்டியார் அவர்கள் சென்ற திங்கட்கிழமை (18-2-52) சென்னையிலிருந்து விமான மார்க்கமாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். சென்ற வருடம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்த் திருவிழாவுக்கு வந்திருந்த செட்டியார் அவர்கள் உலகம் சுற்றும் தமிழன் என்ற பெருமைக்கு உரித்தானவர்கள். இருபத்தொன்பது வயது நிறைந்த இத் தமிழ்ச் செல்வரின் நூல்களைப் படிப்பவர்களும் அவரது விரிவுரைகளைக் கேட்பவர்களும் அன்னாரின் அனுபவம் பொதிந்த கருத்துக்களைக் கண்டு ஆச்சரியப்படாமல் இருக்கவே மாட்டார்கள். அதே போன்று ஆங்கிலத்திலும் அழகான கட்டுரைகள் எழுதுகின்றார்; விரிவுரைகளும் ஆற்றுகின்றார்.

அன்று மாலை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் திரு. இலக்குமணன் செட்டியார் அவர்கள் ஆற்றிய விரிவுரையில் மேல்நாட்டுக் கல்வி முறைகளைப் பற்றி ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்தார். இக் கூட்டத்துக்கு வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் அவர்கள் தலைமை வகித்துப் பேசும்போது தன வணிகர்கள் அன்று தொட்டு இன்றுவரை சமய வளர்ச்சிக்காக உழைத்துவருகின்றனர் எனவும், அவர்கள் தமிழ்ப் பற்று மிகுந்தவர்கள் எனவுங் குறிப்பிட்டிருந்தார். திரு. இலக்குமணன் செட்டியார் அவர்கள் சில மாதங்களுக்கு முன்னர் ஈழகேசரியிலே தமிழ்ப் பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்களைப்பற்றி எழுதிய கட்டுரை மிகச்சிறப்பாக இருந்ததெனவும் திரு. அம்பிகைபாகன் குறிப்பிட்டிருந்தார். செட்டியார் அவர்கள் தொடர்ந்து பேசும்போது அமெரிக்க மக்கள் காலத்தின் அருமையை உணர்ந்து வருகின்றனர் எனத் தெரிவித்தார்.

அடுத்த நாள் திரு. இலக்குமணன் செட்டியார் தீவுப் பகுதிகளைத் தரிசித்தார். இவருடன் திரு. வேலாயுதபிள்ளை அவர்களும் சென்றிருந்தார். திரு. செட்டியார் அவர்கள் புங்குடுதீவிலும் நயினதீவிலும் விரிவுரைகள் ஆற்றினார். ஐந்து வருடங்களுக்குப் பின்னர் நயினதீவில் அன்றுதான் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றதெனத் தெரிகின்றது.

சென்ற புதன்கிழமை திரு. இலக்குமணன் அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியையும் அங்குள்ள தலை சிறந்த நூல் நிலையத்தையும் தரிசித்தார்கள். கல்லூரி நூல் நிலையம் செட்டியார் அவர்களை நன்கு கவர்ந்து விட்டது. அன்று மாலை சாவகச்சேரி இந்துக்கல்லூரியிற் கல்லூரி அதிபர் திரு. ஏ. எஸ். கனகரத்தினம் அவர்களின் தலைமையில் மாணவர்களுக்குச் சில அரிய விஷயங்களைத் தெரிவித்தார். திருநெல்வேலித் தமிழ்ப் பாடசாலையில் நடைபெற்ற கூட்டத்துக்குத் தமிழ்ப் பேராசிரியர் பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு. செட்டியார் அவர்கள் மேனுட்டில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் நிலவிவரும் அன்பையும் மதிப்பையும் மிக இதமாக எடுத்துரைத்தார். விரிவுரைக்குப் பின்னர் அன்பர்கள் பலர் கேட்ட கேள்விகளுக்குச் சுவையாகவும் விளக்கமாகவும் பதில் அளித்தார்.

ஈழகேசரியின் தந்தை திரு. நா. பொன்னையா அவர்களின் இல்லத்தில் நடைபெற்ற தேநீர் விருந்துக்குப் பின்னர் திரு. செட்டியார் அவர்கள் மகாவித்துவான் கணேச ஐயர் அவர்களை அவரது ஆச்சிரமத்திலே தரிசித்தார். இக் காலத்தில் உள்ள ஒரு சிலர்

[தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க]

உழையுங்கள்:
மாதம் ரூ. 100/-தொடங்கி 300/-வரை முதலீடின்றி
உழையுங்கள்
விபரங்கள்:
இறுமாக அனுப்பப்படும்
GIRSON KNITTING WORKS, LUDHIANA.
[4529-iv]

யாழ்ப்பாணத்தில்
ஈழகேசரி
கிடைக்குமிடம்:
த. தம்பித்துரை,
பத்திரிகை விற்பனையாளர்,
226, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
கிளைகள்:
(1) 67, கச்சேரி வீதி
(2) 33, பெரியகடை
யாழ்ப்பாணம்.

# அவனும் மனிதன்தான்!

வ. அ. இராசரத்தினம்

இந்தச் சிறிய விஷயத்தை எப்படிச் சொல்வதென எனக்குத் தெரியவில்லை. இதை நீங்கள் கதை யென்று தானும் ஒப்புக்கொள்ளமாட்டீர்கள்.

என்னைப்போன்ற கதாசிரியன் ஒருவன் அவர்களைத் தன் கதைக்குக் கதாபாத்திரங்களாக எடுத்துக்கொள்வான் என்பது அவர்கட்கே தெரிந்திராது. தெரிந்திருந்தால், பாவம்! அவன் முகப் பவுடருக்கும் பட்டுப் புடவைக்குமாகத் தன் தாய் தந்தையரைப் பிய்த்துப் பிடுங்கியிருக்க வேண்டும். அவனும் நீட்டுக் காற்சட்டையோ தூய வெள்ளை வேட்டியோ அணிந்துகொண்டு ஏதாவது ஓர் கலாசாலையிற் படித்திருக்க வேண்டும்!

அவளுடைய பேரும் எனக்குத் தெரியாது. அவளுடைய மேனி புடம் போட்ட தங்கம் போல இருந்ததினாலும், சௌகரியத்திற்காகவும் நான் அவளைத் தங்கம் என்றே அழைக்கிறேன். தங்கம் அவனை இராசா என்றழைத்த காரணத்தினால் நானும் அவனை இராசா என்றே எழுதுகிறேன்.

இராசாவுக்கு எங்கே என்ன வேலை என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் வாழ்க்கையை உற்றுக் கவனித்ததில் அவன் எங்கோ ஓர் தொழிற்சாலையில் நெஞ்சு மூறிய, வெயர்வை சொட்ட, வேலை செய்கிறான்; வாழ்க்கைக்குப் போதாத வருமானம் என்பது தெரிந்தது.

— 2 —

அன்றும் என்றும் போல அவன் நன்றாக இருட்டிய பிறகு தன் வீட்டிற்கு வருகிறான்.

ஆனால் அவனிடம் வேலை செய்த அலுப்போ, களைப்போ காணப்படவில்லை. தலைமயிர் எல்லாம் தொழிற்சாலைத் தூசு படிந்து திக்குக்கொரு புறமாய் முறைத்துக்கொண்டு நிற்கின்றன. கண்கள் கொவ்வைப்பழம் போற் சிவந்திருக்கின்றன. எங்கள் கிராமத்துக் கிரவல் ரோட்டில் ஊர்ந்து வரும் கோயிற் தேர் போலத் தள்ளாடிக்கொண்டே வரும் அவன் நடையும், அழுக்குப் படிந்து சடையடித்துப்போய்க் கிழிந்துகிடக்கும் அவன் உடையும் எவருக்கும் ஓர் பயங்கலந்த அநுதாபத்தைக் கொடுக்கும் என்பதை அவன் உணர்ந்தானோ என்னவோ, அவன் வந்தவண்ணமேயிருந்தான்.

வாசற்படியிற் கால்வைத்து ஏறுகிறான்.

உச்சந்தலையிற் கதவுநிலை 'நக்' கென்று அடித்துவிடுகிறது. நொந்ததோ என்னவோ உள்ளே போகிறான்.

போதையின் மயக்கத்திலே தீப்பந்தமாயுருளும் தன் கண்களைச் சுழற்றி வீட்டைக்கலும் ஒரு முறை பார்க்கிறான்.

ஏமாற்றத்தின் பிரதிபலிப்பாய் உடல் முழுவதும ஆடிக்கிறது. மீசை மயிர்கள்கூடக் குத்திட்டு நிற்கின்றன.

"தங்கம்...... தங்கம்......."

அந்த அசுரத் தொனியை எதிரொலித்து அந்தச் சூழலிலுள்ள எல்லாமே அலறுகின்றன.

தங்கம்...... தங்கம்......

மறுபடியும் கத்துகிறான்.

தங்கம் முகத்தை விகாரமாக வைத்துக்கொண்டு பின்புறத்துக் கதவால் பயந்து பயந்து உள்ளே வருகிறாள்.

"எங்க போனுவோ மகாராணி"

அவன் வாயிலிருந்து வந்த புளித்த கள்ளின் கோரமான நெடியில் அவளுக்குக் குமட்டல் எடுத்தது. சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு "ஐயோ; இன்றைக்குமா குடிச்சிட்டீர்"? என்கிறாள். அச்சத்தால் மிர

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)


விலை அறிவிப்பு

## வூட் வார்ட்ஸ் 'கிறைப் வாட்டர்'

வூட்வார்ட்ஸ் கிறைப் வாட்டரின்
உண்மையான சில்லறை விற்பனவு விலை

**ரூபா 2 ஒரு போத்தல்**
[எங்கு உள்ளூர் வரி செல்லுபடியோ அது உள்பட]

கூடுதலாகக் கொடுக்கவேண்டாம்

வூட்வார்ட்ஸ் கிறைப் வாட்டரை நீர் வாங்கும்போது

ஒவ்வொருபோத்தலிலும் இவ்வடையாளத்தைப் பார்த்து வாங்கவும்

போலிகளில் எச்சரிக்கையாயிருங்கள்!

WW I-III W. WOODWARD, LTD., LONDON, ENGLAND.



சகல பயிர்களுக்கு

## C C C பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில்
40 வருடகால அனுபவத்தின் பயனாக

நாங்கள்

## C C C

## கலவைப்பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிறோம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசீலனை செய்யப்பட்டு விற்கப் படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் C C C கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி,
லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

The
**Colombo Commercial Company,**
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: COSSACK, தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல. 5351.

[4515]

★ அந்தக் காலத்திற் சட்ட நூல் அறிந்த நியாயவாதிகள் சத்தியத்தைக் கைக்கொண்டனர்.

★ ஆறுமுகநாவலர் அவர்கள், பிறிற்றேவிலும் இராமநாதனே நேர்மையுள்ளவர் என வாதித்தார்.

# நாமும் நமது முன்னேரும்

பண்டிதர்
ஆ. சி. நாகலிங்கம்

எமது மூதாதையர்களைவிட நாம் முன்னேறவில்லை. கடந்த பத்தொன்பதாம் நூற்றாண்டை எடுத்துக்கொள்ளுவோம். அக்காலம் வடபெரும் பகுதியில் அமெரிக்க மிஷனரிமார் கால் வைத்தனர். வட்டுக்கோட்டைச் செமினரி என்னும் கல்வி நிலையம் அவர்களாலே தாபிக்கப்பட்டது. இவ்வைபவம் ஏறத்தாழ கி. பி. 1822 வரையில் நடைபெற்றது. அக்காலம் முதல் மாணவராக இருந்த விசுவநாதபிள்ளை செமினரியில் உள்ள கடைசி வகுப்பாகும் பிரவேசப் பரீட்சையிற் சித்தி எய்தினர். அதனிலும் உயர்ந்த வகுப்பு அந்தப் பள்ளிக்கூடத்தில் இல்லை. பிள்ளை அவர்களும் அவர் மாணாக்கர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களும் செமினரியார் விருப்பிற் கிணங்கச் சென்னபட்டணம் சென்று 1857-ம் ஆண்டு பீ. ஏ. பரீட்சையிற் பிரவேசித்துச் சித்தியெய்தினர். அன்று தொடக்கம் பீ. ஏ. பரீட்சை சென்னபட்டணத்தில் நடைபெறுகின்றது. எவ்வகையான பிரயாண வசதியும் இல்லாத காலத்தில், அந்த இருவரினதும் அரியசெயலை இன்றுள்ள நாம் நினைக்கவும் பக்குவம் அற்றவர்களே! உயரிய மாடிகளில் இருந்து மின்சார வசதிகளுடன் படிக்கும் இக்கால மாணவர்கள் பீ. ஏ. பட்டம் கிடைத்தால் உத்தியோகமே தேடுவர். மேற் குறிப்பிட்ட இருவர்களினதும் ஆக்க வேலைகளுள் ஒன்றேனும் செய்தாரை நாம் எங்கும் காணவில்லை.

அந்தக் காலத்திற் பனை ஏடுகளிற் கையினால் எழுதிப் படித்தனர். பிழையுடன் எழுதுவது இயற்கைதான். அந்நாளிற் சிறீலசிறீ ஆறுமுகநாவலர் அவர்கள் தோன்றித் திருக்குறள் முதலான அரிய நூல்களைப் பிழை நீக்கியே அச்சேற்றினர். பலவகையான இயந்திர சாதனங்களும் உதவி செய்யும் இந்நாளிற் பிழை திருத்தம் இல்லாத புத்தகங்கள் காண்பது குதிரைக் கொம்பே.

## சட்டமும் சத்தியமும்

அந்தக் காலத்திற் சட்ட நூல் அறிந்த நியாயவாதிகள் சத்தியத்தைக் கைக்கொண்டனர். 1879-ம் ஆண்டு இலங்கைச் சட்டசபைத் தேர்தல் முதன்முதல் நடைபெற்றது. சேர் பொன். இராமநாதனுடன் பிறிற்றே என்னும் நியாயவாதியும் அபேட்சகராகப் போட்டியிட்டார். இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள நியாயவாதிகள் யாழ்ப்பாண நகரில் மாபெருங் கூட்டங் கூடினார்கள். மகாவித்துவான் விசுவநாதபிள்ளை அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. ஆறுமுகநாவலர் அவர்கள், பிறிற்றேவிலும் இராமநாதனே நேர்மையுள்ளவர் என வாதித்தார். நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வழக்கிற் கோயிலார் கட்சிக்கு ஏற்பட்ட பிறிற்றே, நாவலரின் உதவியை நாடி, வழக்கை விட்டுக்கொடுப்பதாக எழுதிய கடிதங்களும், தந்திகளும் சபையிற் படிக்கப்பட்டன. எல்லாரும் இராமநாதனையே தெரிந்தனுப்பினர்கள். நாவலர் அவர்கள் சொல்லியபடி இந்நாளில் நடைபெறுகின்ற தேர்தல்களில் நியாயமும் வழங்குகின்றதோ சொல்லுங்கள். ஆறுமுகநாவலருக்கும் விசுவநாதபிள்ளைக்கும சமயப்போர் சிதம்பரம் வடக்குவீதியில் நடைபெற்றது. மூன்றும்நாட் போரில் நாவலர் வெற்றிகொள்ள விசுவநாதபிள்ளை தோல்வியை ஒப்புக்கொண்டு கழுவாயும் செய்துகொண்டார். இன்றுள்ளவர்கள் சமய உண்மையைக் கண்டால் ஒத்துக் கொள்ளுகின்றார்களோ வென்பது கேள்விக்கிடமானது.

## உழவும் தொழிலும்

உழவும் வியாபாரமும் நம் முன்னோர்களாற் கண் எனக் கருதப்பட்டு வந்தன. இலங்கையின் விளைபொருள்கள் காவிரிப்பூம் பட்டினத்துக்குக் கப்பல்மூலம் அனுப்பப்பட்டன என்பதைச் சங்கநூலிற் காணலாம். இன்று உள்ள நாம் உழவுத் தொழிலை மறந்து, உத்தியோகமே தேடுகின்றோம். அதனால், நாழியரிசிக்கு நாம் படும் பாடு இம்மாத்திரம் அல்ல. இரங்கூன் முதலான நாடுகள் அரிசி இல்லை என்றால் உத்தியோகப்பற்றே உடைய நமது கதிதான் யாதாகுமோ அறியோம். திரைகடல் ஓடியுந் திரவியந் தேடிய நம் முன்னோர்கள் வடபெரும்பகுதியில் உள்ள பனங்கட்டி வகைகளைப் பருத்தித்துறையிற் கப்பலேற்றி, ஜேர்மனி முதலான தேசத்திற்குக் கொண்டுபோய் விற்றனர். அவர்களது சந்ததியிற் பிறந்த நாமோ, வருடாவிதம் பல கோடிக்கணக்கான ரூபாயை ஜாவாவுக்கு அனுப்பிக் கறுப்புச் சீனி வாங்குகின்றோம்.

நெசவுதொழிலும் பருத்திச் சாகுபடியும் எம் முன்னோர்களாற் போற்றி வளர்க்கப்பட்டன. செல்வமகளிர்கள் கைகளினால் நெய்த துணிவகைகள் பொருட்காட்சி இடங்களிலும் வைக்கப்பட்டன. சாயத்தொழிலில் எங்கள் நாடு சிறப்புற்று விளங்கியது. இலங்கையிற் சேணியர், கைக்கோளர், பறையர் ஆகியசாதியாளர் நெசவுதொழிலை வியாபார விருத்திக்காகச் செய்தார்கள். அந்நியராட்சியும் சாதிப்பேயும் அந்த அரிய தொழிலை நிலைகுலையச் செய்தன. பருத்தி விளைவை அதிகம் விருத்திப் படுத்தினார்கள். அதனால், பருத்தியடைப்பு, பருத்திச்சிமா என்னும் பெயர்கள் சில ஊர்களுக்கும் வளவுகளுக்கும் இன்னும் வழங்குகின்றன. பஞ்சை மூட்டைகட்டிக் கப்பலேற்றிய துறைமுகம் **பருத்தித்துறை**யென இன்றும் விளங்குகின்றது. உலக மகா யுத்தம் காரணமாக அயல்நாடுகளில் நின்று துணிவகைகள் வாராத சமயம் பஞ்சுபடாப் பாடுபட்ட நாம் நம் முன்னோர்களுக்கு இணையாவது எப்படி?

## நோயற்ற வாழ்வு

சாணத்தால் வீடுகளையும் முற்றங்களையும் மெழுகித் தெளித்துச் சுத்தத்தைக் காப்பாற்றிய எம் முன்னோர்கள் நோயற்றே வாழ்ந்தார்கள். 'சிமென்ட்' மெழுக்கும் நச்சுத் திராவகத் தெளிப்பும் பல புதிய நோய்களை உண்டாக்குகின்றன. வாழ்க்கையிலும் அனர்த்தம் விளைவிக்கின்றது. மாரிகாலம் குளிரும் கோடைகாலம் சூடும் தருவது புதியமாதிரியான வீடு அமைப்பு அல்லவோ? இந்த இழிநிலையில் உள்ள நாம் முன்னேற்றமடைந்தவர்களா?

இன்று நாம் அடைந்த முற்போக்கில் மேல்நாட்டு நாகரீகத்தைப் பின்பற்றியது ஒன்று. ஆடம்பர வாழ்க்கையை நடத்துவது மற்றொன்று. இந்த இரண்டினையும் நாம் அனுபவிக்கும் வகையில், மேல்நாட்டு விஞ்ஞான நூல்கள், வேதி சாத்திரங்கள் அதிக உதவி புரிகின்றன. எமது முன்னோர்கள் ஆன்மீக வளர்ச்சியில் அதிகம் பாடுபட்டார்கள். நாவலர், சைவசமய ஆசாரியர்கள், இராமகிருஷ்ணர், புத்தர், ஆதிசங்கரர், கிறிஸ்து, ஈசாநபி ஆகியவர்கள் தேடிக் குவித்த ஆத்மீகத் திரவியங்கள் அளவில்லாதன. அவைகளைப் பின்பற்றியே எமது கண்முன் இருந்து மறைந்த சுவாமி விவேகாநந்தர், மகாத்மா காந்தி, இரமணமகாரிஷி, அரவிந்தர் ஆகியோர் வாழ்ந்தார்கள். விவேகாநந்தசுவாமிகள் இந்தியர்களுக்கு ஒரு சமயம் எச்சரிக்கை செய்த போது "பூரண விடுதலை அடைவதற்கு ஆத்மீக உணர்ச்சியையே வளரச் செய்யுங்கள்" என்கிறார். இன்றுள்ள நாம் ஆத்மீகத் துறையைச் சிறிதேனும் கைப்பற்றுதபொழுது முன்னோர்களின் நிறைவு பெற்ற பரிபூரண நிலையை அடையவில்லை என்பது நிச்சயமல்லவா?

## வாழ வழி

பண்டிதர் கா. மாணிக்கம்

முந்தையோர் தத்தம் வாழ்வை முதன்மையாய்ப் பேணி வாழ்ந்து
சிந்தையின் நிறைவு கொண்டு தேவையாம் உணவு கண்டு
நொந்தனர் இன்றி ஏனை நாடுகட் குணவும் போக்கி
விந்தையாய் வாழ்ந்தா ரென்னில் வீணுரை யன்றே யன்றே.

பரம்பொருள் தன்னை நாளும் பணிவுடன் போற்றி செய்து
கரைந்துமே உருகி நின்று கண்டனர் நெறியி னாலே
உரந்தனில் இறைவ னாரின் உண்மையை உணரோ ராகில்
இறந்தனம் அன்றி ஈண்டே இருந்தன மென்ன லாமோ!

முடியுடை மன்னர் தம்மின் முதன்மைசேர் ஆட்சி யெல்லாம்
குடிகள்தம் வியர்வை சிந்தக் கொடுத்தநல் விளைவா லன்றோ!
நடந்ததே யன்றி, ஈங்கு நம்முன்னோர் உழைப்பின் றாகில்
இடனுண்டோ அவர்க்கு வாழ்வு! இம்மியு மில்லை யன்றே.

ஆதலாற் குடிகள் தம்மீ தன்பூண் டாட்சி செய்து
கோதிலா மன்னர் பன்னாட் குவலயந் தன்னில் வாழ்ந்தார்
நோவன செய்தார் வாழ்வை நொடியினில் இழந்தா ரென்னில்
ஆவன குடியா லன்றி அவனியில் வேறுண் டாமோ!

ஆயிரத் தைந்து நூறோ டைந்துசேர் ஆண்டு தொட்டுச்
சேய்மைசேர் நாட்டார் வந்து சிந்தையை மயக்கி வைத்துத்
தூய்மையாம் வாழ்வு போக்கிச் சோம்பலை நாட்டி யந்தோ!
வாழ்வையே ஒழித்து விட்டார் வறுமையும் சூழ்ந்த தந்தோ!

தன்னர சாட்சி பெற்ற தன்மையால் எங்கள் வாழ்வு
உண்மையிற் பண்டு போன்றே உலகினில் நிலவ என்றும்
நம்நலம் பெருக நாளும் *நம்மிடி ஒழிந்து போக
இன்னிலை காண்போம் இங்கே இயைவன கருது வோமே,

சிக்கனம் என்று சொல்லித் தினந்தினம் செல்வர் தாமும்
ஒக்கவே கூவி நின்றும் உண்மையை உணரா ரந்தோ!
சித்தமாய்க் குடும்ப வாழ்வின் தேவையை உணர்ந்து நன்கு
நித்தமே வாழ்வு கொள்ளில் நேரிய வாழ்வ தாமே.

உண்மையாம் வறுமை தன்னில் உள்ளமே நிறைதல் வீணே
எண்ணமே நன்மை யாகி இயைதொழில் பூண்டு நின்று
உன்னியே உணவி னோடும் உடையுமே கண்டு கொள்ளில்
நண்ணுமோ வறுமை வாழ்வு நமக்கென உணரு வோமே.

ஏவரும் செல்வ ராதல் இயைவதும் இன்றே என்றும்
யாவரும் முயல்வோம் நாளும் நம்நிலை ஓங்க நன்றே
ஏர்தரும் அரசில் எங்கட் கேற்பன கேட்டே நிற்போம்
ஒருவம் தனிநூற் கல்வி உண்மையில் நல்ல தாமோ!

பேருறும் நூல்கள் கற்றுப் பெருமையாற் பதவி †கொண்டோர்
ஏர்தரும் வருவாய் ஏழை மக்களின் உழைப்பே அன்றோ!
சீர்மையாம் பதவி போகிற் செய்வதே அறியார் அன்னார்
யாவரும் பழிக்க வாழ்ந்து நமன்தனை நணுகல் பொய்யோ!

இளமையிற் றொழிலி னோடே இயைந்தநற் கலைகள் கற்பின்
வளமையே நாடும் காணும்; வாழ்க்கையும் சிறப்ப தாகும்;
உளமுமே சிறக்கும்; உண்மை நெறியுமே சிறக்கும்; என்றும்
நலமுமே சிறக்கும்; நல்ல அரசுமே சிறக்கும் நன்றே.

* நம்மிடிமை † கொண்டவர்களது

புத்தகங்கள், பத்திரிகைகள், விற்பனையாளர்கள்.
தமிழ்ப்பண்ணை
யாழ்ப்பாணம். இலங்கை.

1930

# ஈழகேசரி

சுன்னுகம், கரஉ மாசி கஉ
— காந்தி ஆண்டு 83 —
பேசுந் தந்தி இல. 805

## மலையாளப் புகையிலை

யாழ்ப்பாணக் கமக்காரருக்கு உயிர்நாடியாகவுள்ளது புகையிலைச் செய்கை. தென்னிலங்கையில் றப்பர், தேயிலை தென்னை என்பன போல யாழ்ப்பாண வாசிகள் முற்றுமுழுதாகத் தமது சீவிய ஆதாரமாகக் கொள்வது இப்புகையிலையே. இதன் விருத்தி தடைப்படுமாயின் யாழ்ப்பாண மக்களின் பொருளாதார நிலையும் பெரிதும் சீர்குலையும். யாழ்ப்பாணத்திற் பயிரிடப்படும் புகையிலை பெரும்பான்மையும் இதுவரையும் மலையாளத்துக்கே அனுப்பப்பட்டு வந்தது. இந்திய அரசினர் இதன் இறக்குமதிக்குப் பன்முறை முட்டுக்கட்டை சார்த்திவந்தனர். என்றாலும் இடைவிடாத முயற்சியாலும் ஊக்கத்தாலும் இவ்வியாபாரம் இன்னும் இருந்துகொண்டே வருகின்றது.

ஆனல், இப்போது சுதந்திரம் பெற்ற இந்திய அரசினர், இலங்கையிலிருந்து மலையாளத்துக்கு ஏற்றுமதியாகும் புகையிலையை நாளடைவில் முற்ருகத் தடுத்துவிடத் திட்டம் போட்டுள்ளனர். இப்படிச் செய்யின் யாழ்ப்பாணத்தவர்க்கு ஏற்படும் பெருநட்டம் இம்மாத்திரமன்று. இதனை நோக்கி யாழ்ப்பாணக் கமக்காரர் இடைவிடாது மனுச் செய்ததன்பயனக இலங்கையரசினர் சிறிது கண்விழித்து இவ்விஷயத்தில் அக்கறை கொண்டனர். சமீபத்திற் கொழும்பில், இலங்கை—இந்திய வியாபார விஷயமாக நீண்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் இருநாட்டுப் பிரதிநிதிகளும் கலந்து ஆராய்ச்சி செய்து இன்ன இன்ன பொருள்கள் இறக்குமதி செய்யலாமென்று இணக்கப் பொருத்தனை செய்துகொண்டனர். ஆனல் யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதியாகும் மலையாளப் புகையிலையைப்பற்றி ஒருவித முடிவுக்கும் வரவியலாதுபோனது பெருந் துக்கமென்றே கூறவேண்டும். இலங்கையிலிருந்து இந்தியாவுக்குள் இறக்குமதியாகும் கொப்பரு, கயிறு, தேங்காய் நெய், றப்பர் என்பனபற்றியும், இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் இறக்குமதியாகும் பருத்தி பட்டுப் புடவை, மிளகாய், வெண்காயம், சரக்குவகை, உருளைக்கிழங்கு என்பன விஷயமாகவும் முடிவுக்கு வந்த இரு நாட்டரசினர் யாழ்ப்பாணப் புகையிலையைப்பற்றித் தீர்க்கமானமுடிவுகாணுதது பெருந் துக்கமான விஷயமாகும்.

எனவே, யாழ்ப்பாணக் கமக்காரர் கதி வரவரக் கேவல நிலையை அடைகின்றதென்றே சொல்ல வேண்டும். இப் புகையிலை வியாபார விஷயமாக இன்னும் ஆராய்ச்சி நடந்துகொண்டிருப்பதாக அறிகின்ருேம். இலங்கையிலிருந்து இந்தியாவுக்குள் இறக்குமதியாகும் யாழ்ப்பாணப் புகையிலையின் தீர்வை வரியைக் குறைத்துத் தாம் அதனை அனுமதிப்பதாயின், இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் இறக்குமதியாகும் பீடிப் புகையிலையில் விதிக்கப்படும் தீர்வை வரியைக் குறைக்கும்படி இந்திய அரசினர் கேட்கின்றனர். ஆனல் இலங்கையரசினர் இதற்குச் சடுதியில் இணங்குவதாகக் காணேம். இப் பிணக்கு நீங்காத காரணத்தால் யாழ்ப்பாணப் புகையிலை விஷயமாக ஏற்பட்ட வியாபாரப் பொருத்தனையில் இணக்கமும் ஏற்படவில்லை. என்ருலும் அரசினர் இவ்விஷயத்தை அவ்வளவிற் கைவிடமாட்டாரென்பதே எமது அபிப்பிராயம். பீடிப் புகையிலையில் விதிக்கப்படும் தீர்வையைக் குறைக்க இலங்கையரசினர் ஒருப்படாவிடின், இலங்கைக்குள் இறக்குமதியாகும் பருத்தி பட்டுப் புடவைகளில் விதிக்கும் தீர்வை வரியை ஓரளவுக்குக் குறைப்பின், இந்திய அரசினர் யாழ்ப்பாணப் புகையிலை விஷயமாகச் சிறிது நன்மை புரிய மனங்கொள்வர். இவ்விஷயம் யாழ்ப்பாணக் கமக்காரரின் நல் வாழ்வுக்கு உயிர்நாடியாயிருப்பதால் நமது அரசினர் இதில் அக்கறை கொள்ள வேண்டும். இவ்விஷயமாகத் தாமதங்காட்டிப் பராமுகஞ் செய்யின் பெரு நட்டத்தை யாழ்ப்பாணக் கமக்காரர் அடைவது நிச்சயம்.

---

## பரபரப்பான விஷயம்

வித்தியாதிபதி அவர்கள் சமீபத்தில் விடுத்த சுற்றுநிருபமொன்று ஆசிரியர்களுக்கிடையில் மிக்க பரபரப்பினை உண்டுபண்ணி விட்டது. எல்லா ஆசிரியர்களும் வித்தியாசாலையிற் குறிப்பிட்ட மணித்தியாலத்துக்கு உணவுப் பொருள் விருத்தியில் ஈடுபட வேண்டுமென்பதே இச் சுற்றுநிருபத்தின் சாரமாகும். கல்வி விருத்தியிற் கருத்தூன்றி உழைக்கும் ஆசிரியர்கள், உணவுப் பொருள் விருத்தியிலும் கட்டாயம் ஈடுபடவேண்டுமெனக் கூறுவது பொருந்தாது. வித்தியாசாலைகளிற் காலமும் இடமும், ஆட்களும் வசதியாகக் கிடைப்பின் உணவுப் பொருள் விருத்தியை நாடி முயல்வதை நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனல் எல்லா வித்தியாசாலைகளிலும் இச் சாதனங்களை உடனே பெற்றுவிடலாமோவென்பதுதான் கேள்வி. அப்படியிருப்பினும் ஆசிரியர்கள் எல்லோரையும் கட்டுப்படுத்தல் முறையாகாது. வித்தியாசாலைகளை இம் முயற்சியில் ஈடுபடும்படி அரசினர் கேட்கலாமேயன்றி ஆசிரியர்கள் எல்லோரையும் கட்டுப்படுத்துவது முறையாகாது. ஆசிரியர்கள் செய்து முடிக்கவேண்டிய கடமைகள் பலவுள. அவைகளின் பொறுப்பும் சாமானியமானதன்று. மேன்மேலும் ஆசிரியர்களைக் கட்டுப்படுத்திக் கூடிய வேலையை மேற்கொள்ளச் செய்வதாயின் கல்வி விருத்திக்குத் தடை ஏற்படுவது நிச்சயம். எனவே வித்தியாதிபதி இவ்விஷயமாக விடுத்த சுற்றுநிருபம் பெரிதும் மாற்றப்படவேண்டியதாகும். உணவுப் பொருள் விருத்திசெய்ய வசதிகள் உள்ள வித்தியாசாலைகளில் இக் கட்டளையை நிறைவேற்றலாம். ஏற்ற ஆசிரியர்களைக்கொண்டு இக்காரியத்தை நடாத்திச் செல்வதே முறை. எல்லோரையும் கட்டுப்படுத்துதல் விரும்பப்படுவதன்று.

## பத்தை ஓரத்தில்

பட்டைக்காரி

ஐயர் வரும் வரை அமாவாசை பொறுத்திருக்குமா? இவ்வாறு எங்களிற் பலர் சில சமயங்களிற் பேசும்போது குறிப்பிடுவதுண்டு. அதே போல மகாராணி வரும்வரை கைதிகள் சிறைக்கூண்டுக்குள் காத்துக்கொண்டிருக்கமாட்டார்கள் என்பது இன்று எல்லோரும் அறிந்த விஷயமாகும். எலிசபெத் இராணி திட்டப்படி இலங்கைக்கு விஜயம் செய்யாதிருந்தாலும் அவருடைய வருகையை முன்னிட்டுக் கைதிகள் ஒரு சிலர் மன்னிக்கப்படுவார்கள். 23-ந் திகதி கொழும்புத் திட்டப் பொருட் காட்சித் திறப்புவிழா நடைபெறுவதாயிற்று. அன்று 500 கைதிகள் வரை விடுதலை பெற்றிருப்பார்கள்

❖

### புதிய ஆராய்ச்சி

ஆராய்ச்சிமூலை வலுப்பெற்றுவருவதாற் பூமியின் அச்சுக்களும் இப்போது மூன்ருகிவிட்டன. வடதுருவத்தையும் தென்துருவத்தையும் இணைத்துள்ள அச்சும் பூமத்திய ரேகையிலுள்ள இரண்டு அச்சுக்களுமாக மொத்தம் மூன்று அச்சுக்களிற் பூமி தன்னைத் தானே சுற்றுகின்றதென சோவியத்து விஞ்ஞானி ஒருவர் ஆராய்ச்சி செய்துள்ளார். இப் புதிய முடிபு யாதாக இருந்தாலும் அச்சுநாடுகளின் அச்சாணி முரிந்துவிட்டதென்பது மட்டும் உண்மை. சோவியத்து விஞ்ஞானியின் ஆராய்ச்சிக்கு ஆதரவு ஏற்பட்டால் அவர் உச்சாணிக்கிளையில் ஏறி உட்கார்ந்துகொள்வார் என எண்ணலாமா?

❖

### செட்டியார் நகைத்திறம்

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சோம. லெ. இலக்குமணச் செட்டியார் அவர்கள் அமெரிக்காவைப் பார்! என்ற ஒரு நூலைத் தமிழில் எழுதியுள்ளார். இது சென்னையில் பி. ஏ. வகுப்புக்கு ஒரு பாடபுத்தகமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. என் பிரயாண நினைவுகள், ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம் என்ற நூல்களும் இவரால் எழுதப்பட்டன. இவ்விரு நூல்களைப்பற்றியும் சென்னை வானொலி ஒலிபரப்பியிருப்பதைக் கேளுங்கள்:

"இவ் இரண்டுநூல்களும் 'உலகம் சுற்றும் தமிழன்' மரபில் வந்த ஒரு நல்ல எழுத்தாளராய்த் திகழும் திரு. சோம. லெ. இலக்குமணச் செட்டியார் அவர்களால் எழுதப்பெற்றவை. ஆசிரியர் பண்டைய வணிக மரபினுக்குரிய வணிகத் துறையினர். அதனைப் பயன்படுத்தி நாடு சூழ்வரும் நாகரிக மரபினை நாட்டுக்கு வளர்த்தளிப்பவர். இவ்விரண்டு சிறப்புடன் அவர் நல்ல தமிழ் எழுத்துக் கலையார்வலராகவும், நாட்டுப்பற் றுர்வமிக்க அரசியல், பொருளியல், வாழ்வியல் சிந்தனையாளராகவும் மிளிர்கின்றுர். நூல்கள் பயணக் குறிப்புரைகளாகமட்டுமோ, பள்ளிக் கலைக்கூடங்களுக்குரிய பிறநாட்டு நல்லறிவு நூல்களாகமட்டுமோ திகழவில்லை............நகைச்சுவை, கலைச்சுவை யூட்டும் தலைப்புக்கள். விவரங்கள், சொற்சித்திரங்கள் ஆகியவை இரு நூல்களிலும் நிரம்பியுள்ளன.

"பிரான்சில் இராமன் விளைவு என்னும் ஒளியியல் திறம்பற்றி ஸர் ஸி. வி. இராமன் பேசியபோது, "இராமன் விளைவு என்பது மதுவை எப்படி மாற்றுகிறது என்பதை அறிந்துகொண்ட பிரெஞ்சு விஞ்ஞானிகள், மதுவானது இராமனை எப்படி மாற்றுகிறது என்பதையும் அறிய முயன்றனர், என்ற குறிப்பு ஆசிரியரின் நகைத்திறக் காட்சிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டு."

---

## கலைவளம் பொழியுங் கவினுறு காட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களிலே திட்டப்பெற்றுள்ளது. இன்று கூட்டுறவு இயக்கத்தில் 1,100,000 அங்கத்தினர் சேர்ந்துள்ளனர். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 7000 கூட்டுறவுச் சங்கங்கள் உள. இவற்றையெல்லாம் படங்கள் எடுத்துக் கூறுகின்றன.

இலங்கை அரசாங்கம் இப்போது சிலகாலமாகப் பிரதிவருடமும் ஏறத்தாழ 200,000,000 ரூபாய்வரை உணவுப் பொருளுக்கு உதவி நிதியாக வழங்கி வருகின்றது. உணவுப்பகுதியினர் இதனை விளக்குவதற்காக அருமையான படத்தைக் காட்சிக்கு வைத்துள்ளனர்.

### சிற்ப சித்திரங்கள்

இலங்கைக் கலைஞர்களின் கைப்பணிகளையும் சிற்ப சித்திரங்களையும் கீழைத் தேசங்களிலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்குக் கொழும்புத் திட்டப் பொருட்காட்சி நல்லதோர் சந்தர்ப்பத்தை அளித்துள்ளது. முக்கியமாக இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேஷியா ஆதியாம் நாடுகளிலே குடிசைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள மக்களின் பித்தளை வெள்ளிப் பொருள்களும் மரத்திற் செதுக்கப்பட்டுள்ள சித்திர வேலைகளும், வண்ண வண்ணச் சேலைகளும் நூதனமானவை. இந்தோனேஷியா நிலையம் காவியக் காட்சிகளின் அருங் கலைக் கழகமாகவே காட்சியளிக்கின்றது.

இவற்றையெல்லாங் கண்டு களிப்பதற்கும் பொருட்காட்சி நடைபெறும் பூங்காவில் நீந்தி விளையாடி ஒளிக்கும் வர்ண ஜாலங்களைக் கண்டு மயங்குவதற்கும் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் ஜனங்கள் வந்து குவிந்தவண்ணமாகவேயிருக்கின்றனர். மார்ச் மாதம் 23-ந் திகதிவரை நடைபெறவிருக்கும் இம் மாபெருங் காட்சியானது இலங்கையின் முன்னேற்றப் பாதையில் ஒரு 'மைல்' கல்லாக அமையும் எனபதற்குச் சந்தேகமில்லை.

## ஸ்ரீ இராமகிருஷ்ண ஜயந்தி

### வித்தியாலயத்தில் விழா

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ணபரமஹம்சரின் ஜயந்தி விழா 27-2-52 புதன்கிழமை கொண்டாடப்பெறும்.

அன்று மாலை திரு. ச. அம்பிகைபாகன் அவர்கள் தலைமையில் ஓர் பகிரங்கக் கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். திரு. வி. நாகலிங்கம் (வழக்கறிஞர்) அவர்கள் விரிவுரையாற்றுவார்கள். சங்கீதபூஷணம் திரு. சண்முகரத்தினம் அவர்களின் இன்னிசைக் கச்சேரியும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**சன்மானம் ரூபாய் 500**

சுன்னுகம் ஸ்ரேஷன் ரோட்டிலுள்ள எனது புடவைக் கடைக்குள் சென்ற 19-ந் உ இரவு களவுபோன விஷயமாகத் தகவல்கள் கொடுத்துக் களவுப் பொருட்களையோ அல்லது களவெடுத்தவர்களையோ அத்தாட்சியோடு காட்டிக் கொடுப்பவர்களுக்கு ரூபாய் 500 சன்மானங் கொடுக்கப்படும்.

இங்ஙனம்,
க. தம்பையா
சுன்னுகம், 22-2-52 [4535]

## தேகவியோகம்

### பராசத்தியம்மா

ஞானாகர் சிவசிதம்பர ஐயர் அவர்களின் மனைவியாரும், கா. சி. மகேச சர்மா பிரசித்த நொத்தாரிஸ் அவர்களினது அன்னையாரும் ஆகிய பராசக்தியம்மா சென்ற வியாழக்கிழமை (14-2-52) தேகவியோகமாயினர். இவரது ஆன்மா சாந்தியடைவதாக!

**கோட்டு விற்பனவு விளம்பரம்**

இல. 1241 Testy

தொல்புரம்
காலம் சென்ற தம்பிப்பிள்ளை இராசையாவின் மரண சாதனத் தத்துவ வழக்கில்,

தொல்புரம்
தம்பிப்பிள்ளை இராசையா கைம்பெண் சின்னம்மா
தத்துவகாரி

வட்டுக்கோட்டை
(1) இராசையா தியாகரராசா
(2) இராசையா நடராசா
(2-ம் எதிர்வாதி பராயமற்றவர். இவரின் பராமரிப்புக் காரன் 1-ம் எதிர்வாதி)

தொல்புரம்
(3) தம்பிப்பிள்ளை இராசையா மகள் புவனேஸ்வரி அம்மா. இவளின் பராமரிப்புக் காரன் வேலுப்பிள்ளை இராசகாரியர்.
எதிர்வாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 1241-ம் இலக்கத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1952-ம் ஆண்டு மார்ச்சு (பங்குனி) மாதம் 15-ந் திகதி (15-3-52) சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**காணியின் விபரம்**

சங்கானைக் கோவிற்பற்று தொல்புரமிறை "பெரிய தோட்டம் ஒல்லையும் பூமி வளவும்" நிலப்பரப்பு 8. எல்லை: கிழக்கு, இராசகாரியர் பெண் சின்னச்சிப்பிள்ளைக்கும் குமாரவேலு முருகேசவிற்கும் பெண் இலட்சுமியாருக்குமுரிய ஆதனங்கள். வடக்கு, எதிர்வீரசிங்கத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு, வயிரமுத்து பெண் சின்னத்தங்கத்தின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். தெற்கு, ஒழுங்கையும் மூத்ததம்பி சின்னையாவின் உரிமைக்காரருக்குரிய ஆதனமும். இதில் சொரியலாய் அரைவாசியும் தெற்கெல்லைக்காணியில் இருக்கும் கிணற்றிற் பங்கும் தூர்வை வழி வாய்க்காலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner &
Licensed Auctioneer

தெல்லிப்பழை,
21-2-1952. [4533]

# காங்கிரஸ் அபிமானம் குறைதல்

## புத்துயிர் அளிக்க - நேருஜி யோசனை

### இந்தியா

காங்கிரஸ்சபை இதுவரையும் இருந்ததுபோல் ஆதிக்கமடையவேண்டில் அதனைத் திருத்தியமைத்துப் புத்துயிர் அளிக்கவேண்டுமெனப் பிரதமர் நேரு அவர்கள் தமது சுற்றுநிருபத்திற் கூறியுள்ளார். மிக்க ஆதிக்கம் படைத்த கட்சியாகவிருந்த காங்கிரஸ் சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தலில் இவ்வளவு கேவலமான வீழ்ச்சியைச் சில மாகாணத்தில் அடையுமென எவரும் எதிர்பார்த்ததில்லை. சென்னை, திருவாங்கூர், ஒறிஸா, வங்காளம் முதலிய இடங்களில் காங்கிரஸ் அபேட்சகர்கள் அடைந்த படுதோல்வி இம்மட்டல்ல. இதற்குப் பல காரணங்கள் இப்போது கூறிப் பயனில்லை. பொதுமக்கட்குக் காங்கிரஸில் இருந்துவந்த அபிமானம் முற்றாக நீங்கிவிட்டதாகவே எண்ணவேண்டும். சர்வசன வாக்குரிமைதான் இதற்குக் காரணம் என்கின்றனர் சில தலைவர்கள். அதனைப் பிரதமர் நேரு அவர்கள் அங்கீகரிக்கவில்லை. பொதுமக்கள் மிக்க விவேகத்துடனும் ஆலோசனையுடனும் வாக்குரிமையை அளித்துள்ளாரென்பது அவரது துணிகரமான அபிப்பிராயம்.

காங்கிரஸ் கட்சியைத் திருத்தியமைப்பதற்குப் பின்வரும் அம்சங்களை மேற்கொள்ளுமாறு பிரதமர் நேரு கூறியுள்ளார். (1) கட்சி ஒழுங்குகள் நன்கு கையாளப்படவேண்டும். (2) ஏழைப் பொதுமக்களுடன் காங்கிரஸ் ஸ்தாபனங்கள் நெருங்கி உழைக்கவேண்டும். (3) பொதுமக்களின் குறைநிறைகளைக் கவனித்து அவர்களை முன்னேற்றமடையச் செய்யவேண்டும். (4) காங்கிரஸ் சபையின் கொள்கைகள், திட்டங்கள் யாவையெனப் பொதுமக்கட்கு விளக்கவேண்டும். (5) உற்சாகமும் அறிவும் நிரம்பிய இளைஞரைக் காங்கிரஸில் தொண்டாற்ற வைக்கவேண்டும்.

### திரு. பிரகாசத்தின் திமிர்

ஒருகால் சிறந்த காங்கிரஸ்வாதியாக விளங்கிய திரு. பிரகாசம் அவர்கள் இப்போது காங்கிரஸ் ஸ்தாபனத்தைப் பாட்டில் விழுத்தச் செய்தவரும் அட்டூழியங்கட்கு எல்லையில்லை. கொம்யூனிஸ்ட் கட்சியுடன் சேர்ந்து சென்னையில் புதிய அரசாங்கம் அமைக்கவும் எத்தனிக்கின்றார். கொம்யூனிஸ்ட் கட்சியினரை வாயாரப் புகழ்கின்றார். அவர்கள் அஹிம்சையைக் கையாண்டமைக்குக் காரணம் காங்கிரஸ் அரசாங்கத்தின் கொடிய செயல்களாம். காங்கிரஸ் தலைவர்களில் கொண்ட ஆத்திரத்தை இவர் அந்த ஸ்தாபனத்தில் வைத்து உரோஞ்சுவது எப்படிப்பொருந்துமோ? திரு. பிரகாசம் அவர்களின் ஒவ்வாத கொள்கையைக் காங்கிரஸ் அங்கீகரிக்காவிடின் அதற்கு வேறு பிழையான கட்சிகளில் சேர்ந்து பெரிய துரோகச் செயல்கள் செய்வது எப்படி முறையாகும். ஆத்திரத்தின் காரணமாக இவர் பெரிய ஒரு ஸ்தாபனத்தை அடியோடு அழிக்க முயல்கின்றாரே.

### ஆந்திர மாகாணம்

எத்தனையோ சங்கடங்கள் ஏற்பட்டுள்ள இச் சந்தர்ப்பத்தில் ஆந்திரமாகாணப் பிரச்சினையும் புதிதாக மறுபடி கிளப்பப்படுகிறது. சுவாமி சீதாராம் டில்லி சென்று பிரதமர் நேரு அவர்களையும், குடியாட்சித் தலைவர் டாக்டர் இராசேந்திரப்பிரசாத் அவர்களையும் இதுவிஷயமாகப் பேட்டி கண்டு பேசினர். இவ்விஷயமாகத் தங்கட்கு ஒரு ஆட்சேபமுமில்லை யென்றும், ஏற்படப்போகும் புதிய அரசாங்கந்தான் இதனை முடிவு செய்ய வேண்டுமென்றுங் கூறிவிட்டனர். இது விஷயமாகச் சத்தியாக்கிரக ஏற்பாடுகள் செய்துவந்த சுவாமி சீதாராம் என்ன செய்வாரோ தெரியவில்லை. ஆந்திர மாகாணம் அமைக்கும் விஷயத்தில், அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் தமக்குள் இணங்கிக்கொண்டால் இவ்விஷயம் இலகுவில் கைகூடுமென்று பிரதமர் நேரு விளக்கினர்.

---

# உலகம் சுற்றும் தமிழ்ச் செல்வர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழை ஆங்கிலமாக்கிவிடப் பார்க்கின்றனர் என மகாவித்துவான் அவர்கள் செட்டியாருடன் பேசும்போது நகைச்சுவையுடன் குறிப்பிட்டிருந்தார்.

நீர்வேலியில் அன்றிரவு நடைபெற்ற கூட்டத்துக்கு அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் திரு. சிவரத்தினம் அவர்கள் தலைமை வகித்தார். திரு. செட்டியார் அவர்கள் பேசும்போது நம்மனோர் ஆங்கிலேயரிடமிருந்து நற்பழக்கங்களைக் கற்றுக் கொள்ளாது தேவையற்ற காரியங்களிற் கவனஞ் செலுத்தி வருகின்றனரெனக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது: மேலைத் தேசத்து மக்களிடம் பொது அறிவு அபிவிருத்தியடைந்துள்ளது. இதற்கு அங்கு நிலவுங் கட்டாயக் கல்வி முறையும் படிப்பில் உள்ள ஆர்வமுமே காரணங்களாகும். புத்தகப் படிப்பிலும் பார்க்க உலகப் போக்கை நன்கு அறிவதற்குச் சுற்றுப்பிரயாணங்கள் உதவி புரிகின்றன.

பிரிட்டிஷ் மக்களின் வாழ்க்கை உன்னதமானது. கஷ்டமான காலங்களிலும் அவர்கள் பொறுமையை இழப்பதில்லை. கட்டுப்பாட்டிலும் நம்பிக்கையிலும் அவர்கள் அக்கறை மிகுந்தவர்கள். அவர்களின் நற்குண நற்செய்கைகளை நாங்கள் போற்றவேண்டும். அங்கு பிரயாண நெருக்கடி அதிகமாக இருந்தாலும் எந்தப் பிரயாணியாவது தமது பொருள் தவறிவிட்டதாகப் பதைபதைப்பதேயில்லை. தவறிய பொருள்களை எடுத்துப் பாதுகாத்து அதற்குரியவர்களிடம் அவற்றைச் சேர்த்து வைப்பதற்கு லண்டனிற் பல நிலையங்கள் உள. செட்டியார் அவர்கள் ஆரம்பத்திற் பேசும்போது நீர்வேலிக் கிராமத்தின் பெருமையைத் தமிழ்நாடும் அறிந்திருக்கின்றதெனக் குறிப்பிட்டிருந்தார். வியாழனன்று உரும்பராய் இந்துக் கல்லூரியிலும் ஒரு விரிவுரையாற்றினர்.

யாழ்ப்பாணத்தில் திரு. செட்டியார் அவர்கள் திரு. இராஜ அரியரத்தினம் அவர்களின் விருந்தினராகத் தங்கியிருந்தார். வியாழக்கிழமை மாலை கொழும்புக்குப் பிரயாணமானர். திரு. கணேசலிங்கம் அவர்கள் செட்டியார் அவர்களைத் திருகோணமலை, மட்டக்களப்புப்போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்வார்.

---


### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 7977

சுளிபுரம்,
கந்தவனம் சுந்தரம்பிள்ளை
கைம்பெண் அமிர்தம் வழக்காளி

சுளிபுரம்,
1. பேரம்பலம் சுப்பிரமணியம் மகள் கதிராசிப்பிள்ளை

சுளிபுரம்,
(மரணம்) 2. சுப்பிரமணியம் கைம்பெண் தெய்வானை
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 7977-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1952-ம் ஆண்டு மார்ச்சு (பங்குனி) மாதம் 15-ந் திகதி (15-3-52) சனிக்கிழமை முற்பகல் $10\frac{1}{2}$ மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**—முதல் வட்டி ரூபாய் 308—75-ம், இதில் ரூபாய் 300/-க்கு 18-7-51 திகதி தொடக்கம் 22-11-51 திகதி வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும்.

**காணியின் விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று சுளிபுரமிறை "வாதாவில்" நெற்பரப்பு 24-ம் குளி $6\frac{3}{4}$-ம் இணற்றில் அரைவாசிப்பங்கும். எல்லை: கிழக்கு, இராமலிங்கம் நாகமுத்துவின் ஆதனமும், வீரகத்திப்பிள்ளையார் கோவிலுக்குரிய ஆதனமும். வடக்கு, தாமு பெண் சின்னாச்சியின் ஆதனம். மேற்கு, குருநாதி கைம்பெண் யோகத்திற்கும் பிள்ளைகளுக்குமுரிய ஆதனம். தெற்கு, சுப்பிரமணியம் பெண் தங்கத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் அரைவாசி($\frac{1}{2}$) மூற்பதிவு E 285/15.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை,
29–1–1952 [4534]

---

### விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 4007-ம் இலக்கப் பிரிவிடல் வழக்கில் 1952-ம் ஆண்டு மாசி மாதம் 12-ம் திகதியைக் கொண்ட கோட்டுக்கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனம் 1952ம் ஆண்டு சித்திரை மாதம் 3-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி வரையில் அந்தக் காணிக்குள் நின்று முதலாவதாக மதிப்பின்படி காணிப் பங்காளருக்குள்ளும் பங்காளர் கேள்விக்காரராக இல்லாவிட்டால் மறுபேர்களுக்கிடையிலும் அதியுயர்ந்த கேள்விக் காரனுக்குப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்-

**விபரம்**

புலோலி தெற்கு
வேலப்பா பெரியதம்பி வழக்காளி

மேற்படி யூர்
கந்தையா சின்னத்தம்பியும்
மறுபேரும் எதிராளிகள்

**ஆதனம்**

புலோலி கிழக்கு சிங்கபாகு தேவன் குறிச்சியிறை மாரைக்காய நிலப்பரப்பு 10. குளி $6\frac{1}{3}\frac{5}{2}$. பனைகள் வேம்புகளும். எல்லை: கிழக்கு, கந்தப்பர் சின்னையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு, கதிரேசு சிற்றம்பலத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு, கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு, கதிரேசு சுப்பிரமணியத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம் இது முழுவதும். இது உலாந்தா வே. சிவரத்தினத்தால் 1951-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 7-ந் திகதி 1050-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தில் விபரிக்கப்பட்டிருக்கிறது. பெறுமதி ரூபா 5215/

S. C. Kanagasabai
கொம்மிஷனர்

புலோலி கிழக்கு
20-2-1952 [4531]


---

# கொழும்புத் திட்ட நோக்கம்

## ஆசியநாடுகள் பொருளாதார விருத்தி

**சோ. வேலாயுதபிள்ளை**

தென்கிழக்காசியாவிலுள்ள பின்னணி நாடுகளின் பொருளாதாரத்தையும் சமூக சேவைகளையும், ஆறு வருட காலத்தில், இயன்றளவு அபிவிருத்தி செய்வதே கொழும்புத் திட்டத்தின் நோக்கமாகும். இதற்கு, ஒவ்வொரு நாடும் தனது மூலச் செல்வங்களை அபிவிருத்தி செய்தல் மிக அவசியமெனக் கருதப்படுகிறது. மக்களின் பரிபூரண சுகத்திற்கு வேண்டிய தேவைகளை யெல்லாம் பெறுவதற்குக் கைத்தொழில், உணவு உற்பத்தி முதலிய துறைகளில் முன்னேற்றமடைதல் அவசியம். இதற்கு நேச வல்லரசுகள் உதவி புரியும். தென்கிழக் காசியாவிலுள்ள பின்னணி நாடுகளின் ஜனத்தொகை உலக ஜனத்தொகையில் நாலிலொன்றாகும். இவர்களின் பொருளாதாரத்தை உருவாக்குவது ஓர் மகத்தான சேவையென்றால் அது மிகையாகாது.

பின்னணியில் நிற்கும் நாடுகளுள் இலங்கையும் ஒன்று. இலங்கையின் பொருளாதார பலத்திற்கு விவசாயத்தில் முன்னேற்றமடைதல் முக்கியமானது. வரண்ட பிரதேசங்களிலேயே அதிக நிலம் பயிர் செய்ய ஏற்றதாக இருக்கிறது. பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அமைக்கப்படாவிட்டால் விவசாயம் நற்பலனை அளிக்கமாட்டாது. விவசாய முன்னேற்றத்தினால் இறக்குமதிகளைக் குறைக்கலாம். தற்பொழுது இறக்குமதி செய்யப்படும் பொருள்களில் அரைவாசி உணவுப்பொருள்களே யாகும். விவசாயத்திற்குக் கைத்துணையாகப் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நடத்துவதென்றால் இயந்திர சாதனங்களும் உற்பத்தித் தளவாடங்களும் தேவையாகும். மூலதனமின்றி இவைகளைப் பெறமுடியாது.

இலங்கையிலுள்ள கைத்தொழிலோ மூளைப் பருவத்திலேயே இருக்கிறது. கைத்தொழில்களைப் பெருக்குவதற்கு இரசாயன ஆராய்ச்சிகள் அவசியமாகும். என்னென்ன தொழில் இலங்கையில் விருத்தியாகும் எனப் பரிசோதனைகள் செய்யவேண்டும். கைத்தொழில் விருத்தியடைவதால் வேலையில்லாக் கஷ்டமும் தீரும்.

சாகுபடி செய்வதற்கேற்ற ஏராளமான நிலப்பரப்புகள் எங்கள்தேசத்திலுண்டு. இவைகளைத் திருத்திச் சாகுபடி செய்வதனால் தேசத்தின் செல்வத்தை விருத்திசெய்யலாம். வாழ்க்கைத் தராதரமும் உயரும். வருடாவருடம் 200,000 ஆகப் பெருகும் ஜனத்தொகைக் கஷ்டத்தையும் தீர்த்துக்கொள்ளலாம். இவ்வித அபிவிருத்தி முயற்சிகளை யெல்லாம் நடத்துவதற்குப் பெருந்தொகைப் பணம் தேவைப்படும்.

புகையிரதப் பகுதியிலும் கொழும்புத் துறைமுகத்திலும் பல சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதும் மிக அவசியம். புதிய புகைவண்டிகள் தேவை. கப்பல்களிலிருந்து இறக்கும் சரக்குகளைச் சேகரித்து வைக்கப் பல பண்டசாலைகள் கட்டப்படவேண்டும். நீர்வீழ்ச்சி மின்சாரத் திட்டத்தின் வேலைகள் இன்னும் பூரணமாக நடைபெறவில்லை. இதனைப் பூரணமாக நிறைவேற்ற வேண்டும். பூரண கல்வியை மக்கட்கு ஊட்டப் பல வித்தியாசாலைகள் புதிதாகக் கட்டப்படவேண்டும். வைத்திய சுகாதாரச் சேவைகளைச் சீர்ப்படுத்தப் பல வைத்தியசாலைகள் கட்டப்படவேண்டும். சமூகத்திற்குக் கவலையைக் கொடுக்கும் வீட்டுத் தட்டுப்பாட்டினையும் தீர்த்தல் அவசியம். மக்களின் வாழ்க்கைத் தராதரத்தை உயர்த்துவதென்றால் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவேண்டும். அதிகம் உற்பத்தி செய்யவேண்டும். மக்கள் கூடிய வேதனம் பெறவேண்டும். விவசாயமும் கைத்தொழிலும் விருத்தியடைந்தால் அதிக மக்கட்கு வேலை கிடைக்கும். இதற்கு நவீன இயந்திரசாதனங்களும் கருவிகளும் செயற்கை உரமும் அதிகம் வேண்டும்.

செப்பமான மூலதனமில்லாவிட்டால் இவைகளைப் பெறமுடியாது. மூன்றுவிதமாக மூலதனத்தைப் பெறலாம். வரிகள் மூலம் பெறுவது ஒருவிதம். கடந்த சில வருஷங்களாக வரிகள் அதிகரித்தே வருகின்றன. மேலும் வரிகளை அதிகரித்தல் நல்லதல்ல. இரண்டாவதாக, வெளிநாடுகளிடம் கடன்பெற்று மூலதனத்தைப் பெறலாம். வெளிநாடுகளிடமிருந்து கடன் பெற்றால் அதிகவட்டி இறுக்க நேரிடும். மூன்றாவதாக எங்கள் நாட்டிலேயே கடன்வாங்கி நிதியைத் திரட்டலாம்.

---

### புடவைக் களவு

சுன்னாகம் ஸ்ரேஷன் ரோட்டிலுள்ள எம். கே. தம்பையா அவர்களினது புடவைக் கடைக்குள் சென்ற 19-ந் திகதி இரவு கள்வர் புகுந்து ஏறக்குறைய 4000/- ரூபாய் பெறுமதியுள்ள புடவைகளைக் களவெடுத்துச் சென்றுள்ளார்களாம். இது சம்பந்தமாகப் பொலீசார் விசாரணை செய்து வருகின்றனர். அடையாளங்கள் படம்பிடிக்கும் பொலீஸ் பகுதியினர் கடைக்குள் காணப்பட்டிருந்த அடையாளங்கள் யாவற்றையும் படம்பிடித்துச் சென்றுள்ளார்கள்.

---


### வடமாகாண
### ஆசிரியர் சகாய நிதிச் சங்கம்

இச்சங்கத்தின் பதினெட்டாவது வருடாந்தக் கூட்டம் நிகழும் 1952-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 8-ந் திகதி (8-3-52) சனிக்கிழமை காலை 10 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

அங்கத்தவர் அனைவரும் சமுகமளிக்கும்படி அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

8, பிறவுன் றோட், நீராவியடி,
யாழ்ப்பாணம்,
22-2-52.

இங்ஙனம்
கா. வைரமுத்து
காரியதரிசி

[4532]

# நாலும் நாற்கயிறும்

## 2. நூலிலே தந்தி

அம்பிகாபுரம் இந்துக் கல்லூரியிலே விஞ்ஞான சாஸ்திர ஆசிரியர், பேசுந் தந்தியின் மூலதார விதிகளை விளக்கப்படுத்தும்பொருட்டு இருநூறு யார் நீளமான ஒரு நூற்பந்தைச் செலவழித்தார். இரு பேணிகளின் அடித்தட்டிலே துவாரஞ் செய்து நூலின் இரு அந்தங்களையும் அத் துவாரங்களுள் நுழைத்துக் கட்டி, அப் பேணிகளின் வாயில் ஒருவர் வாய் வைத்துப் பேச இன்னொருவர் காதை வைத்துக் கேட்கும்படி விஞ்ஞான சாஸ்திர ஆசிரியர்பணித்தார்.

நூலின் ஓர் அந்தத்திலே தங்கராஜனையும், மறு அந்தத்திலே தங்கமணி செல்லப்பாவை (பஞ்சகல்யாணியை)யும் முதலிலே தந்தி பேசுமாறு ஆசிரியர் கேட்டுக்கொண்டார். பஞ்சகல்யாணிக்கு என்னவிதமான செய்தியை அனுப்புவதென்று தங்கராஜன் ஆலோசித்துக்கொண்டே சென்றான். தங்கராஜன் துணிந்து 'நான் உன்னைக் காதலிக்கிறேன்' என்ற செய்தியை அனுப்பினான். அங்கேயிருந்து 'நானும் அப்படித்தான்' என்ற செய்தி சிறிது தாமதித்து வந்தது. 'உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணிக்கிறேன்' என்று தமிழ்ப்பண்டிதர் நடையைக் கையாண்டு அடுத்த செய்தி அனுப்பினான். 'வானமும் பூமியும் உள்ளளவும்' என்று அடுத்த செய்தி இயற்கை சாஸ்திர ஆசிரியரின் நடையில் வந்தது. 'மலை பெயரினும் நிலையிற் பெயரேன்', 'உயிரிழக்கினும் உறுதியிழவேன்'. 'விடுதந்தியை, மற்றச் சோடி பேசலாம்' என்று ஆசிரியரின் இரண்டாம் உத்தரவு வந்தது. சாதாரணமாகக் காதலர்கள் கதை முடிந்து பிரிவார்கள். இது பிரிந்து நின்று பேசிவிட்டு ஒன்று சேர்ந்தார்கள். அதாவது வகுப்புக்கு வந்தார்கள்.

கற்பழிக்கப்பட்டவள் முகம் போலப் பஞ்சகல்யாணியின் முகத்தில் அசடு வழிந்தது. அதை யார் கவனித்தார்கள். அன்றுதான் பஞ்சகல்யாணி

**கசின்**

யின் கருவிழிகளின் ஒளிநிழலின் கண் தங்கராஜனை விசுவாசமுள்ள பிரஜையாகப் பிரகடனப்படுத்திய முதலாவது தேதியாகும். இப்பிரகடன வைபவம் சிறிதும் ஆரவாரமின்றி அமைதியாகப் பேசுந் தந்தி மூலம் செய்து முடிக்கப்பெற்றது.

பென்ஷனியர் செல்லப்பா அவர்கள் தமது மகளின் பெருமையை இரு பொருள்களின் மூலம் எடுத்து விளக்குவார் என்றும், அதில் ஒன்று நாற்கயிறென்றும் முதலிற் சொன்னேன். மற்றது சாதாரண தையல் நூலாகும். இலங்கையிலே பள்ளி மாணவிகளுக்குச் செலவாகும் அத்தனை நூல்களினளவு தமது மகளுக்குச் செலவாகிறதென்று அவர் பெருமையாகச் சொல்வார். தையல் என்ற கலையிலே எவரும் தமது மகளைத் தாண்ட முடியாதென்பதும், அதற்காதாரம், அவள் செலவழிக்கும் நூல் என்பதும் அவரின் வாதமாகும்.

நூல் தையற் கலைக்கு ஆதாரமானதென்பது, எல்லோரினதும் முடிபாகும். பேசுந்தந்திக்கு மூலாதாரமானது என்பது விஞ்ஞான சாஸ்திர ஆசிரியர் முடிபு. ஆனால் இதே நூலை வைத்து ஆராய்ச்சி செய்து நூதன கருவியொன்றைக் கண்டுபிடித்தபெருமை பஞ்சகல்யாணியையும், தங்கராஜனையும் சேரும்.

பென்ஷனியர் செல்லப்பா தமது மகளின் தையற்கலைத் திறமையை ஒருபாற் பிரசாரஞ் செய்யப் பஞ்சகல்யாணி தினேதினே ஒவ்வொரு நூற்பந்தாக வேறொரு கலைக்கு உபயோகப்படுத்திக் கொண்டிருந்தாள். அதுதான் காதற் கலை.

தங்கராஜன் மூன்றுவது முறையாகப் பிரவேசிக்கப்போகின்ற பரீட்சைக்குக் கச்சை வரிந்துகட்டிக் கொண்டு நின்றான். புதிய 'பிக்பென்' மணிக்கூடு, நான்கு 'கிளாஸ்' கொள்ளக்கூடிய பெரிய சுடுநீர்ப் போத்தல் ஆகிய இரண்டும் புதிதாக வரவழைக்கப்பட்டன. தனியறை, தளபாடம், இவை வழக்கமாக உள்ளன. கற்கண்டும் பாலும் கலந்த பாகு சுடுநீர்ப் போத்தலுள் நிரம்பவிட்டு இரவு பத்து மணிக்கு அவனுடைய அறைக்குப்போகும். 'பிக்பென்' கடிகாரத்தின் முள்ளு ஒன்று என்ற இலக்கத்தைக் காட்டிக் கொண்டு நிற்கும். இரவு ஒரு மணிக்குமுன் அவனுடைய அறைக்கு யாரும் போனால் அவன் நல்ல நித்திரையாக இருப்பான். ஒரு மணிக்கு எழும்பிப் படிக்கப் போகிறான் என்பது அப்பொழுது கருத்து. ஒரு மணிக்குப்பின் யார் போனாலும் நித்திரையாக இருப்பான். ஒருமணி வரையும் படித்து விட்டுப் படுத்திருக்கிறான் என்பது அப்போதய கருத்தாகும்.

ஆனால், ஒரு மணிக்கும் இரண்டு மணிக்கும் இடையில் யாரும் போய்ப்பார்த்தால் ஆளைக்காணக் கிடையாது. சுடுநீர்ப்போத்தலும் வெறுமையாயிருக்கும். மலகூடத்திற்குச் சென்று விட்டான் என்பது அப்போதைய கருத்தாகும்.

பாலையும் பருகிப் பருகிப் பாடநூல் ஆராய்ச்சி செய்கிறான் என்று பிறர் நினைக்க அவன் சிலைனால் ஆராய்ச்சி செய்து வந்தான். சரியாக ஒருமணிக்குக் கடிகாரமணி அடித்ததும், தங்கராஜன் நித்திரையினின்றும் துடிதுடித்து எழுந்து, முகங்கழுவிக்கொண்டு பாலையுங் குடித்துவிட்டு மூன்று வீடு தள்ளி அப்பாலுள்ள பஞ்சகல்யாணியின் வீட்டை நோக்கி நடப்பான்.

பென்ஷனியர் செல்லப்பாவளவின் தென்மேற்கு மூலையிற் பெரிய ஒரு நாவல் விருட்சம் நின்றது. அது அகத்திலுள்ளார்க்கும், புறத்திலுள்ளார்க்கும், நாவற் பழங்களை நனிநல்கி வந்தது. அர்த்த ஜாமத்தில் நாவற்பழம் விரும்பி நாவல் மரத்தில் ஏறுவோர் இன்றெனினும் தங்கராஜன் அம்மரத்தில் ஏறுவதை யாருங் கண்டால் வேறு என்ன காரணந்தான் அவன் சொல்ல முடியும்? நாவற்பழங்களை நயந்து பாலரை இன்புறுத்திய அந்நாவல்மரம் தங்கராஜனுக்கு வேலி கடக்கவும் உதவியது.

வேலி கடந்து அடிக்குமேல் அடிவைத்துப் பஞ்சகல்யாணியின் படுக்கையறையின் சாளரவாயிலின் அருகே வந்து நிற்பான். கதவுகள் பூட்டப்பெற்ற சாளரத்தின் ஒரு சிறு பலகை நீக்கலுக்குள்ளால் புத்தம் புதிய சிலைநூல் தொங்கிக்கொண்டிருக்கும்.

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)





துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S. 168-X54 TM



## இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி

## THE CEYLON STATE MORTGAGE BANK


இந்த அரசாங்க ஈட்டு வங்கியிற் கடன்கள், பத்திரங்கள் மூலம் அசைவற்ற காணிகளின் பிணையிற் கீழ்க்காணும் விஷயங்களுக்குச் செலவுசெய்யும் பொருட்டுக் கொடுக்கப்படும்.

(1) கமத்தொழில் விஷயங்களுக்கும்,
(2) கட்டிடங்கள் கட்டுவதற்கும், விலைக்கு வாங்குவதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும்.
(3) மேற்காட்டிய விஷயங்களின் பொருட்டுக் கடன் வாங்கி யிருந்தால் அக்கடனைத் தீர்ப்பதற்கும்.
(4) ஏதாவது கட்டடங்கள் அல்லது காணியின் பேரிலுள்ள ஈடு மீளுவதற்கும்.

வட்டி விபரம் பின்வருமாறு:— கடன் எடுக்குந் தொகை 5,000 ரூபாவுக்குக் குறைந்திருந்தால் 6 வீத வட்டியும்; 5,000 ரூபாவுக்குக் கூடியும் 10,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5½ வீத வட்டியும்; 10,000 ரூபாவுக்குக் கூடியும் 50,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5 வீத வட்டியும்; 50,000 ரூபாவுக்குக் குறையாதிருந்தால் 4½ வீத வட்டியுமாம்.

கடன்கொடுக்கும் குறைந்த தொகை 2000 ரூபாவாகும். விபரங்கட்கு 'மனேச்சர்', இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி, இல. 91, ஹோட்டன்பிளேஸ், கொழும்பு, என்ற விலாசத்திற்கு எழுதி அறியவும்.

[4513]




அன்பான மருமக்களே!

சில மருமக்கள் மாமாவுக்குச் சோதிடம் தெரியும் என்று எண்ணியிருக்கின்றார்கள். ஒரு மருகி "மாமா! கொழும்புக் காட்சி அதிட்டச்சீட்டில் எனது இலக்கச்சீட்டுப் பரிசுபெறுமா? சரியாகச் சொன்னால் உங்களுக்கு ஒரு நல்ல 'கார்' வாங்கித் தருகிறேன்" என எழுதியுள்ளார். பாவம்! அந்தமருகிக்கு உள்ள உற்சாகத்தையும், என்மீதுள்ள பட்சத்தையும் மெச்சுகிறேன்.

அதிட்டம் வரும்பொழுது அது எவரையுங் கேட்கமாட்டாது. மருகியின் அதிட்டம் மாமாவின் அதிட்டமும்தான். பொருட்காட்சி அதிகாரிகள் சீட்டுத்தெரிவை மிகநேர்மையாகநடத்த ஒழுங்குசெய்திருக்கிறார்கள். காட்சியைப்பற்றிநினைக்கவே மனப் பூரிப்படைகின்றது என்றால் பார்க்கும்பொழுது சொல்லவும் வேண்டுமா? வர்ணஜால நீர்ஊற்றுக்கள், கலைக்காட்சிகள், விநோதப் பொருள்கள், வேடிக்கைகள், இப்படி எத்தனையோவற்றைக் கண்டு களிக்கப் போகின்றோம். எல்லாவற்றையும் விடத் தீப அலங்காரம் ஜெகஜோதியாய் இருக்கும். இவ் வைபவத்தில் வெளிநாடுகள் பல பங்குபற்றுகின்றன.

# அற்புத ஊரி - II

மே.403. ம. த. லோறன்ஸ்

இறந்துகிடக்கும் மீன்களையும், சுரி, சிறுபூச்சி, புழு, முதலியவற்றையுமே ஊரிகள் உட்கொள்ளுகின்றன. ஓர் இடத்தில் ஒரு மீன் இறந்துகிடந்தால், அவ்விடத்தே சிறியனவும் பெரியனவுமாகிய பல ஊரிகள் மொய்த்துக்கொண்டு அந்த இறந்த மீனை உண்பதைக் காணலாம். கரையோரங்களிலேயே ஊரிகள் பெரும்பாலும் வசிக்கின்றன.

ஒரு குறிப்பிட்ட அளவிற்கு வளர்ந்ததும், ஊரிகள் தாமாகவே அழிந்து விடுகின்றன. அவை எவ்வாறு இறக்கின்றனவென்பது எவருக்குமே தெரியாது. நீரில் வாழும் எந்தச் செந்துவும் இவ்வூரிகளுக்குக் கெடுதிவிளைவிப்பதாகத் தெரியவில்லை.

ஊரிக்கு எல்லாமாக ஆறு கால்கள் உள. அவற்றுள் நான்கு பெரிய கால்கள், இரண்டு சிறிய கால்கள். ஒருகால் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, சுமார் இரண்டு அங்குல நீளமுடையதாகவிருக்கின்றது. அங்குமிங்கும் ஊர்ந்து திரிவதற்கு இக்கால்கள் பெரிதும் உதவுகின்றன. ஊரியினுடைய வாய் மிகச் சிறியது. வாய் மயிர்களால் மூடப்பட்டிருக்கின்றது. பார்ப்பதற்கு ஊரிகள் பயங்கரமாகவிருக்கின்றன. சிறு குழந்தைகள் இதைக் கண்டதும் பயந்து அலறுவார்கள்.

மிகச்சிறிய பிராணியான இந்த ஊரி கலிபோனியா என்ற இடத்திலும் இசையை உண்டாக்குகின்றதெனத் தெரிகின்றது.

## மாமா பதில்

மே. 389. நா. பொ. தருமலிங்கம்: கட்டுரை நன்று. கொழும்பு சென்றால் அங்கு நடைபெறும் பொருட்காட்சியையும் பார்க்கவும்.

மே. 587. மு. ஆலாலசுந்தரம்; பாவம்! சோமுவின் கதி அப்படியாகி விட்டதே.

மே. 596. ந. சோமசுந்தரம்: ஆம், பொறுமை மிகத் திமையானது.

கி. 594. பொ. நடனசிகாமணி உம்மைக் கீழ்ப் பிரிவிற் சேர்த்திருக்கின்றேன். பிழை தவறுதலாக ஏற்பட்டதாகும்.

மே. 267. ந. சிவபாதம்: கொழும்புக்காட்சி கண் கொளாக் காட்சியாக இருக்கின்றது. நீர் பார்க்கவேண்டும். படமும் பிடிக்கவேண்டும்!

## புதிய மருமகன்

மே. 599. அ. மணியம்; அரசினர் தமிழ்ப் பாடசாலை, 4, தம்பின் ரோடு, கிம்மாஸ், மலாயா.

## பிறந்ததின வாழ்த்துக்கள்

24-2-52—1-3-52

மே. 28. சு. பிரேமசம்பு, மே. 70. வி. கணபதிப்பிள்ளை, மே. 76. சி. செல்வத்துரை, மே. 123. ச. கமலாவதி, மே. 127. பொ. புனிதவதி, மே. 164. இ. மகேஸ்வர சர்மா, மே. 175 சி. சரவணபவன், மே. 274. மா. அர்ச்சுனராசா, மே. 286. தி. இராஜேஸ்வரி, கி. 301. க. சிவகாமிப்பிள்ளை, மே. 409, சி. துரைச்சாமி.

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல இன்னும் பல்லாண்டு வாழ்வார்களாக.

மிருகங்களும் பறவைகளும் 7



# நரி

மே. 523
நா. சோமசுந்தரன்

நரியென்ற சொல்லைக்கேட்டதும் ஆத்திரம் பொங்குகிறது. ஆவேசமென்னும் புயல் அகத்தில் அடிக்கிறது. ஏன்? 'நரி' யென்றதும் வஞ்சகர்களைப்பற்றிய ஞாபகம் வருகின்றது. தந்திர வார்த்தைகளாற் பொதுமக்களின் வாக்குகளைப் பெற்றுப் பதவிகளை அபகரித்த அரசியல் தலைவர்களும் ஞாபகத்துக்கு வருகின்றனர்.

நரி நஞ்செண்ணத்தின் வஞ்சனைச் சின்னம், கஞ்சத்தனத்தின் கருவூலம். தந்திரமும் குள்ளப் புத்தியும் ஒருங்கேயமைந்த பிராணி நரி.

நரியானது மற்றைய மிருகங்களையும், புள்ளினங்களையும் கபடமான வார்த்தைகளால் ஏய்த்ததாக எத்தனையோ கதைகளைப் படித்துள்ளோம். பஞ்சதந்திரக் கதைகளில் வஞ்சனையுள்ள நரியைப்பற்றி வாசித்துள்ளோம். நரி தந்திரம் மிக்க மிருகமாக இருப்பதுடன் புத்தியிலும் கூர்மையானது.

நரி உலகில் வாழ்வதால் மனித சமூகம் அதனிடமிருந்து மறக்கமுடியாத பாடமொன்றைப் படித்துக்கொள்ளலாம். நரியைக் காணுந்தோறும் உலகிலே எத்தர்களிருக்கின்றனர். தந்திரக்காரர்களிருக்கின்றனர் என்ற எண்ணம் உதிக்கும். ஆனபடியால் ஏமாற்றப்படாது கவனமாகவிருக்கவேண்டும்.

ஈழகேசரி — பாலர் பகுதி

முழுப்பெயர்: ....................

விலாசம்: ....................

....................

....................

பிறந்ததிகதி: ....................

....................

தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

## நூலும் நூற் கயிறும்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)


மீன்பிடிகாரன் தூண்டலை வீசி எறிந்துவிட்டு மிதவை சிறிது ஆடியதும், கயிற்றைச் சிறிது சுண்டிப்பார்ப்பான். கயிறு சிறிது தாக்கமாக இருந்தால் மீன்படப்போகிறதென்பதை அவன் உணர்ந்துகொள்வான். அதுபோலத் தங்கராஜனும் நூலிலே கை போட்டுச் சிறிது வலிப்பான்.


பஞ்சகல்யாணியின் சின்னவிரலிலே மாட்டப்பெற்ற நூல், அவளுடைய நித்திரையைக் கலைக்க, அவள் கையைத் தூக்குவான். தங்கராஜனின் கையில் இருக்கும் நூல் சுண்டும்.

சிறிது நேரத்திற் பஞ்சகல்யாணியின் அறை சத்தமின்றித் திறந்து சாத்தப்படுவதும், இருவர் நடுஜாமத்தில் நாவற்பழம் விரும்பி நடந்து செல்வதையும் காணலாம். நாவல் மரத்தின் கீழே இருக்கும் அவ்விருவரின் இன்பப் போதைக்குப் பென்ஷனியர் செல்லப்பாவின் குறட்டைச் சத்தம் சுதி கூட்டும்.

(தொடரும்)


# மீனுவிற்கு உண்மையில் சுகவீனம் ஒன்றுமில்லை...




ஹார்லிக்ஸ் உங்கள் குழந்தையை போஷணைக் குறைவிலிருந்து காப்பாற்றும்.


வளரும் குழந்தைகளுக்குத் தேவையான போஷணைச் சத்துக்கள் அடிக்கடி சாதாரண உணவில் அடங்கியிருப்பதில்லை. உங்கள் குழந்தையின் உணவோடு கூடுதலாக தினமும் ஹார்லிக்ஸ் கொடுங்கள். அது முழு ஆடை நிறைந்த சுத்தமான பசும் பாலிலிருந்தும், புஷ்டியளிக்கும் கோதுமை, பக்குவப் படுத்தப்பட்ட பார்லி முதலியவைகளின் சத்துக்களிலிருந்தும் தயாரிக்கப் படுவதால் குழந்தைகளுக்கு மிகவும் சிறந்தது. பாலின் எல்லா நற்பயனும் கூடுதலான வலிமையளிக்கும் போஷணையும் நிறைந்தது.



## ஹார்லிக்ஸ்

கூடுதல் போஷணைக்கு

½ ராத்தல், 1 ராத்தல், 5 ராத்தல் பாட்டில்களில் கிடைக்கும்.




HLC. 2607

*The*
# EeLAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
Largest circulation in Ceylon, India, Burma & Malayan Union
*Founder:* **N. PONNIAH**
T'Phone No. 805
Vol. 22 | Chunnakam, Sunday, Feb. 24, 1952 | No. 32

**சந்தா விபரம்**

ஆண்டுச் சந்தா:
இலங்கை-இந்தியா ரூ. 6-00
மலாயா — $ 6-00
தனிப்பிரதி சதம் 10. காசு 10

## அவனும் மனிதன் தான்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ளும் அவள் விழிகளின் கடையிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர்கள் உதிர்ந்தன.

"ஏனும் உனது அப்பன் வீட்டுக்காசோ"?

"அப்பன் வீட்டுக் காசானல் இப்படிப் பார்த்துக்கொண்டிருப்பேனுக்கும்?" புருஷன் தானே என்ற உரிமை அவளுக்குத் தைரியத்தைக் கொடுத்ததோ என்னவோ அவள் இப்படிச் சொல்லியே விட்டாள்.

"அட; வாயைப்பார்" இந்தச் சொற்கள் வாயிலிருந்து விழுமுன்னமே உதையும், சரியாக அந்த மிருகத்தின் வாரிசைச் சுமந்து கொண்டிருக்கும் அவள் வயிற்றில் விழுகிறது.

தங்கம் அடியற்ற மரம் போலக் கீழே சரிந்து விழுகிறுள். வலியும் வேதனையும் அவளால் தாங்கமுடியவில்லை. அவள் கண்ணிலே உலகம் உருண்டு கொண்டிருப்பது பிரத்தியட்சமாகத் தெரிந்தது.

அவன் பேய்ச் சிரிப்பொன்றைச் சிரித்துவிட்டு அப்படியே நிற்கிறுன்.

சந்தேகமேயில்லை; மிருகந்தான்!

வரண்ட மூளைக்குள்ளே சிக்கிக்கொண்டு, முன்னே ஓடத்தெரியாத கற்பனைபோலக் காலம் ஊர்ந்து செல்லுகின்றது.

தங்கம் தரையிலேயே கிடக்கிறுள். முக்கலும் முனகலும் உயிர் போய்விடவில்லை என்பதை உணர்த்துகின்றன.

அவனும் அவள் அருகில் குந்துகிறுன். அவள் முகத்தைத் தன் முரட்டுக் கைகளாற் தடவிக்கொண்டே "என்னம்மா செய்யுது?"

"ம்" தங்கம் அசைந்து கொடுக்கிறுள். மலடடித்துப் போய்க்கிடந்த தரையிலே தோன்றிய பசும்புற் குருத்துப் போன்ற விழிக்கோணத்திஞல் அவனை இலேசாகப் பார்க்கிறுள்.

"நோகுதா அம்மா?"

சந்தேகமே இல்லை. அவன் மனிதன் தான்! ஆம். மனிதனே தான். அந்த மனிதனின் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் தங்கத்தின் மேல் விழுந்து தெறித்தது. தங்கம் எழுந்து உட்கார்ந்துகொண்டாள்.

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

## பலாலி ஆசிரிய மாணவர் கண்டியைக் கண்டனர்

பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை 2-ம் வருட மாணவர், சரித்திர பூமிசாஸ்திர போாசிரியர்: பி. எம். வேதநாயகம் அவர்களின் தலைமையில், 16-ந் திகதி அனுராசபுரஞ் சென்று அங்குள்ள சரித்திர பூமிசாஸ்திர சம்பந்தமான இடங்களைப் பார்வையிட்டனர். 17, 18-ல் பொலநறுவை, சிகிரியா, தம்புல ஆகிய இடங்களைத் தரிசித்து, அங்குள்ள பண்டை ஓவியங்களைப் பார்த்தனர். 18-ந் திகதி மாத்தளையிலுள்ள தேயிலை இறப்பர் தொழிற்சாலைக்கும் மாலை உயன்வத்தை பாலர் முறைப் பயிற்சி மகளிர் கலாசாலைக்கும் விஜயம் செய்தனர். 19-ந் திகதி செவ்வாய்க்கிழமை அவர்கள் கண்டியிலுள்ள சரித்திர பூமிசாஸ்திர இடங்களையும் வேறு பிரதான இடங்களையும் பார்வையிட்டபின்னர் நுவரெலியாவுக்குப் புறப்படுவார்கள்.

## வட இலங்கைச் சங்கீதசபை
### 1951-ம் வருடப் பரீட்சைப் பெறுபேறுகள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

**1-ம் பகுதி (Grade—1)**

**1-ம் பிரிவு**

N 3. புனிதவதி அம்பலவாணர் $ வாய்ப்பாட்டு & வயலின், 6. பத்மநாயகி குலநாயகம் $ வாய்ப்பாட்டு, 10. பத்மாதேவி சோமசுந்தரம் $ வாய்ப்பாட்டு & [வயலின்—2-ம் பிரிவு], 11. கமலாதேவி சுவாமிநாதன் $ வாய்ப்பாட்டு & வயலின், 16. ஞானதீபம் செத்சி மெரிளு முத்தையா $ வயலின், 19. பராசக்தி முருகேசு $ வாய்ப்பாட்டு, 24. கமலாதேவி வேலுப்பிள்ளை $ வாய்ப்பாட்டு, 26. ஷாந்தி ஞானரஞ்சிதம் காராளசிங்கம் $ வாய்ப்பாட்டு, 29. தர்மலட்சுமி செல்லத்துரை வாய்ப்பாட்டு, 31. தனலெட்சுமி கதிரவேலு, $ வாய்ப்பாட்டு, 33. திரிபுரேஸ்வரி முத்துச்சாமிக் குருக்கள் வாய்ப்பாட்டு, 45. ஆச்சிப்பிள்ளை சுப்பிரமணியம் $ வாய்ப்பாட்டு. 57. இராஜேஸ்வரி சின்னையா வாய்ப்பாட்டு, 58. நவநீதம் கந்தையா, * வாய்ப்பாட்டு, 61. புவனேஸ்வரி பொன்னம்பலம் $ வாய்ப்பாட்டு, 62. வித்யாபூஷணி அம்பலவாணர் $ வாய்ப்பாட்டு & வீணை 68. சிவானந்தவல்லி பொன்னம்பலம் $ வாய்ப்பாட்டு & (வயலின்—2-ம் பிரிவு) 74. புவனேஸ்வரி பொன்னையா $ வாய்ப்பாட்டு, 76. கோசலாதேவி சிவரெத்தினம் $ வாய்ப்பாட்டு, 77. பராசக்தி நாகலிங்கம் $ வாய்ப்பாட்டு, 78. ஞானபூரணம் பரமசாமி $ வாய்ப்பாட்டு, 81. புவனேஸ்வரி பொன்னம்பலம் $ வாய்ப்பாட்டு, 82. கிருஷ்ணம்மா சுப்பிரமணியம் வாய்ப்பாட்டு.

**2-ம் பிரிவு**

N 4. பொன்மலரீஸ்வரி அருணசலம் வாய்ப்பாட்டு, 8. அன்னலட்சுமி பொன்னம்பலம் வாய்ப்பாட்டு, 13. சரோஜினிதேவி சுவாமிநாதன் வாய்ப்பாட்டு, 15. லலிதா இராசமலர் சோமசுந்தரம் வாய்ப்பாட்டு & (வயலின்—சாதாரணசித்தி) 18. இராசலட்சுமி தர்மலிங்கம் வாய்ப்பாட்டு, 28. சரோஜினிதேவி சுப்பையாபிள்ளை, வாய்ப்பாட்டு, 32. கோமளவல்லி குமாரசாமி வாய்ப்பாட்டு, 35. ஹன்னி செல்வநாயகம் வயலின், 36. சாரதாதேவி சிவராஜா வாய்ப்பாட்டு & (வயலின்—சாதாரணசித்தி) 42. விமலாவதி முத்தையா வயலின். 43. பரிமளகாந்தி குருசாமி, வயலின், 44. இந்திராவதி தம்பிஐயா வயலின், 56. விஜயலட்சுமி விஜயரெத்தினம் வாய்ப்பாட்டு, 59. பரமேஸ்வரி சின்னையா வாய்ப்பாட்டு, 60. இந்திராதேவி இரத்தினப்பிரகாசம் வாய்ப்பாட்டு, 65. பிரிஜெட் ஜூலியாளு இரத்தினசிங்கம் வாய்ப்பாட்டு, 67. சுத்தவந்தி குணநாயகம் வாய்ப்பாட்டு, 70. ஞானேஸ்வரி முத்தையா வாய்ப்பாட்டு, 79. ராதாதேவி சபாபதிப்பிள்ளை வாய்ப்பாட்டு 80. தவமணி பொன்னம்பலம் வாய்ப்பாட்டு, 83. சிவானுகூலம் வைத்தியலிங்கம் வாய்ப்பாட்டு, 84. ஜெயராணி மாணிக்கவாசகர் வாய்ப்பாட்டு, 86. கமலாசனி ஆறுமுகம் வயலின், 87. செல்லத்துரை சிவகுருநாதர் வாய்ப்பாட்டு 89. இராசம்மா குமாரசாமி வாய்ப்பாட்டு, 90. பாலயோகம் முத்தையா வாய்ப்பாட்டு.

**சாதாரண சித்தி**

N 1. ஜெயராணி இரத்தினவேல் வாய்ப்பாட்டு, 5. தவராணி தங்கராஜா வீணை, 7. அயிராணி மதியாபரணம் வாய்ப்பாட்டு, 9. மனோகரி வல்லிபுரம் வாய்ப்பாட்டு, 20. பவளவல்லி சுந்தரம் வாய்ப்பாட்டு, 21. பத்மாதேவி சதாசிவம் வாய்ப்பாட்டு, 22. நவநீதவல்லி சதாசிவம் வாய்ப்பாட்டு, 23. விமலாவதி சேனாதிராஜா வாய்ப்பாட்டு, 25. புஷ்பராணி நடராசா வயலின், 30. சிவகங்கை சின்னையா வாய்ப்பாட்டு, 37. விமலாதேவி செல்லத்துரை வாய்ப்பாட்டு & வயலின், 38. மனோன்மணி முருகேசு வாய்ப்பாட்டு, 39. புவனேஸ்வரி கார்த்திகேசு வாய்ப்பாட்டு, 41. செல்லையா சந்திரசேகரம் வாய்ப்பாட்டு; 46. பாக்கியலட்சுமி சிதம்பரப்பிள்ளை வாய்ப்பாட்டு, 47. சிவகலை வைத்தியலிங்கம் வாய்ப்பாட்டு, 48. பூமலர் சின்னத்துரை வாய்ப்பாட்டு, 49. பத்மாவதி பரமு வாய்ப்பாட்டு, 50. கண்மணி கார்த்திகேசு வாய்ப்பாட்டு, 51. தவரோஜினி கனகசபை வாய்ப்பாட்டு, 53. பூபதி பொன்னுத்துரை வாய்ப்பாட்டு & வயலின், 54. இந்திராதேவி செல்லையா வாய்ப்பாட்டு, கமலாதேவி பொன்னுத்துரை வாய்ப்பாட்டு, 63. தேவி கந்தையா வாய்ப்பாட்டு, 64. சிவபாலதேவி செல்வத்துரை வாய்ப்பாட்டு, 66. வேதநாயகி சுப்பிரமணியம் வாய்ப்பாட்டு, 69. ஜீவரஞ்சிதம் பாலரத்தினம் வாய்ப்பாட்டு, 72. கமலாதேவி தம்பிஐயா வாய்ப்பாட்டு, 73. குணமணி இராமலிங்கம் வாய்ப்பாட்டு, 75. புலோமலை பொன்னம்பலம் வாய்ப்பாட்டு, 88. அருந்ததி தனபாலசிங்கம் வாய்ப்பாட்டு.



"லக்ஸ் டொயிலெட் சோப்
என் சருமத்தை மிகவும் அழகாக வைத்துக்கொள்கிறது"
என்கிறுர் லலிதா

பரிமள வாசனையுள்ள இந்த வெண்மையான பரிசுத்த சோப்பால் உங்கள் சருமத்தை அழகு பெறச்செய்யுங்கள்!

சினிமா நக்ஷத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 310-X54 TM

## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம்**
**ரூபா 34,367.00. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.**

**பங்குப் பணம் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்:**
க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிருப்பர்

[4514]

இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம்—குரும்பசிட்டி, முத்தையா-சபாரத்தினம் அவர்களால் ... அச்சகத்தில் 1952-ம் ஆண்டு பெப்ரவரி மீ 24-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது